எப்படி ஜெபிக்கக்கூடாது?

R. ஸ்டான்லி, B.E., M.TECH.,
திருமறைப் போதகராய் மாறிய
ஒரு கட்டிடப் பொறியியலர்

StanleyOnBible
13 Church Colony
Vellore 632 006, India
<stanleyonbible@hotmail.com>
www.StanleyOnBible.com

HOW NOT TO PRAY (Tamil)

Copyright 2010 R. STANLEY

First Edition : January 2010
Second Edition : February 2011

Available in English and Hindi also.

இச்சிறுநூலில் திருமறையின்
பழையதும் புதியதுமான மொழியாக்கங்கள்
இடம்பெற்றுள்ளன.

Printed by
New Shenbagam Offset,
Sivakasi

பொருளடக்கம்

முன்னுரை	...	4
எப்படி ஜெபிக்கக்கூடாது ?	...	5
1. கடவுளைக் கட்டாயப்படுத்தக்கூடாது.	...	7
2. பிசாசைக் குற்றம்சாட்டக்கூடாது.	...	13
3. பிதாவானவரை மறந்துவிடக்கூடாது.	...	20
4. மத்தியஸ்தர்களைத் தேடக்கூடாது.	...	27
5. இருதயத்தில் பகை இருக்கக்கூடாது.	...	34
6. தன்னலமாய் இருக்கக்கூடாது.	....	40
7. உலகச்சிந்தையாய் இருக்கக்கூடாது.	...	47
8. அதிகமாய்ப் பேசக்கூடாது.	...	54
9. இயல்பற்ற விதத்தில் செயல்படக்கூடாது.	...	60
10. ஜெபிப்பதைக் குறித்துப் பெருமையடையக்கூடாது.	...	67

முன்னுரை

இறுதிக் காலத்தைக் குறிட்டு அப்போஸ்தலன் பவுல் கொடுத்த முன்னறிவிப்புகளில் ஒன்று 2 தீமோத்தேயு 4:3இல் உண்டு: "ஒரு காலம் வரும்; அப்பொழுது மக்கள் ஆரோக்கிய மான உபதேசத்தைத் தாங்கமாட்டார்கள். மாறாக, செவித் தினவு கொண்டவர்களாய்த் தங்கள் தீய நாட்டங்களுக் கேற்பத் தங்களுக்கெனப் போதகர்களைத் திரட்டிக் கொள்வார்கள். சத்தியத்திற்குச் செவிசாய்க்க மறுத்து புனைக்கதைகளை நாடிச்செல்வார்கள்!"

இவ்விதமான நாட்கள் ஏற்கனவே வந்துவிட்டன என்றே நான் நம்புகிறேன். எங்கு பார்த்தாலும், பிரசங்கங்களுக்குக் குறைவே இல்லாவிட்டாலும், திருமறையானது திரிக்கப் படுகிறது; திருவசனத்திற்கு என்றுமில்லாத பஞ்சம். பிரசங்க பீடங்களிலிருந்து நாம் கேட்பதெல்லாம் பெரும்பாலும் கதைகளும், சொந்த அனுபவங்களும்தானே தவிர ஆண்ட வரது வார்த்தையின் கலப்படமற்ற வியாக்கியானிப்பு அல்ல. தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் பவுல் கொடுத்த இரு அறிவுரைகளின் அடிப்படையில் இச்சிறுநூலிலுள்ள பாடங் கள் தரப்படுகின்றன. 2 தீமோத்தேயு 4:2, "திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு." தீத்து 2:1, "நீயோ ஆரோக்கியமான உபதேசத்திற்கு ஏற்றவைகளைப் பேசு." "நீயோ..." இங்கு பவுல் ஒரு சிறுபான்மையோரை அறிவுறுத்துவதைப் பார்க் கிறோம். திருவசனப் பணியில் இந்த இரு வாலிபரும் வித்தியாசமாய் இருக்கவேண்டுமென்று பவுல் அவர்களை அழைப்பது இங்கு தெளிவு.

எப்படி ஜெபிக்கக்கூடாது ?

எப்படி ஜெபிக்க **"வேண்டும்"** என்பதற்குப் பதிலாக எப்படி ஜெபிக்கக் **"கூடாது"** என்று உபதேசிப்பது ஏன் என்று நீங்கள் வியக்கலாம். தெய்வீக சத்தியங்களைப் போதிக்கும்போது இயேசுவானவர் இந்த முறையைத்தான் பின்பற்றினார். எடுத்துக்காட்டாக, மத்தேயு 5,6,7ஆம் அத்தியாயங்களிலுள்ள அவரது மலைப்பிரசங்கத்தை நினைவுபடுத்துங்கள். 6ஆம் அத்தியாயத்தில் தானதர்மம், ஜெபம், உபவாசம் ஆகிய மூன்று ஆன்மீகப் பயிற்சிகளைக் குறித்து அவர் பேசினார். அவர் போதித்த முறை இதோ—

''நீங்கள் தர்மம்செய்யும்போது உங்களைப்பற்றித் தம் பட்டம் அடிக்க**வேண்டாம்.** மக்கள் தங்களைப் புகழவேண்டு மென்று வெளிவேடக்காரர் தொழுகைக் கூடங்களிலும் வீதிகளிலும் நின்று அவ்வாறு செய்வர்'' (மத் 6:2).

''நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது வெளிவேடக் காரரைப்போல் இருக்க**வேண்டாம்.** அவர்கள் தொழுகைக் கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்கவேண்டுமென ஜெபம் செய்ய விரும்புகிறார் கள்'' (வச 5).

''நீங்கள் உபவாசம் இருக்கும்போது வெளிவேடக்கார ரைப்போல் முகவாட்டமாய் இருக்க**வேண்டாம்**'' (வச 16).

இயேசுவின் இந்த மாதிரியையே நான் இங்கு பின்பற்ற விரும்புகிறேன். ஏனென்றால், சரியானவற்றைக் கற்றுக் கொள்ளவேண்டுமானால் தவறாய்க் கற்றுக்கொண்டவை களைக் களைந்தே ஆகவேண்டும். கற்பதைவிடக் களைதல் கடினம்தான். ஆனால் அது இன்றியமையாதது, அதி

முக்கியமானது. நாடுகளுக்குத் தீர்க்கனாகக் கடவுள் எரேமியாவை அழைத்தார். அவனுக்குக் கடவுள் கொடுத்த ஆணை முதலாவது, ''பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும்;'' ''அடுத்துதான் ''கட்டவும், நடவும்'' (எரே 1:10). நண்பரே, ஜெபித்தலில் காணப்படும் தவறான பழக்கங் களைக் களைந்து, திருமறையின் அடிப்படையில் திருத்துதல் உபதேசத்தைப் பெற்றுக்கொள்ள உங்கள் மனதை ஆயத்தப்படுத்திக்கொண்டு தொடர்ந்து வாசியுங்கள்.

எப்படி ஜெபிக்கக்கூடாது ?

1

கடவுளைக் கட்டாயப்படுத்தக்கூடாது.

கிறிஸ்தவ வட்டாரங்களில் எங்கும் பிரபலமாய்க் காணப்படும் ஒரு நூதன உபதேசம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதாவது, ஜெபத்தில் கடவுளுக்குக் ''கட்டளை'' கொடுக்க வேண்டும் என்று பலர் போதிக்கிறார்கள். தங்களது வாதத்திற்கு ஏசாயா 45:11ஐச் சுட்டிக் காட்டுகிறார்கள். ''கர்த்தர் சொல்லுகிறதாவது... என் கைகளின் செயல்களைக் F ¿ ¤J vd ¡ F¡ f£l i s æL§f Ÿ.'' ஆங்கிலத்திலும் தமிழிலுமுள்ள புதிய மொழியாக்கங்களை நீங்கள் பார்த்தால், இங்கு ஒரு மொழியாக்கப் பிழை இருப்பதைக் கண்டுபிடிப்பீர்கள். ''எனக்குக் கட்டளையிடுங்கள்'' என்று ஆண்டவர் சொல்லாமல், ''என் கைவினை பற்றி எனக்கே கட்டளையிடுவீர்களா ?'' என்று *பொது மொழிபெயர்ப்பு வேதத்தில்* கொடுக்கப்பட்டிருக்கிறது. மட்டுமல்ல, இவ்வசனத்தின் சூழமைவைக் கவனித்துப் பார்த்தாலும், இக்கருத்துதான் தெளிவாகிறது. வசனம் 9, ''களிமண் குயவனிடம், 'நீ என்னைக் கொண்டு என்ன செய்கிறாய்' என்றும், அவன் வனைந்தது அவனிடம், 'உனக்குக் கைத்திறனே இல்லை' என்றும் சொல்லலாமா ?'' இன்னோர் எடுத்துக்காட்டு வசனம் 10இல் உண்டு: ''தந்தையிடம், 'ஏன் என்னைப் பிறப்பித்தீர் ?' என்றும், தாயிடம், 'ஏன் என்னை இப்படிப் பெற்றெடுத்தாய் ?' என்றும் கேட்பவனுக்கு ஐயோ!'' 12ஆம் வசனம் எப்படித் தொடர்கிறது என்று கவனியுங்கள்: ''நான் உலகை உருவாக்கி அதன்மேல் மனிதரைப் படைத்தேன்; என் கைகளே வானத்தை விரித்தன; அதன் படைத்திரளுக்கு ஆணையிட்டதும் நானே.'' குயவனைக் களி

மண்ணோ, தந்தையை மகனோ, படைத்தவரைப் படைப்போ கேள்விகேட்கவோ, அவர்களுக்குக் கட்டளையிடவோ முடியாது. எனவே, இவ்வசனத்தின் சூழமைவைக் கவனிக்கும்போது, ''எனக்குக் கட்டளையிடுங்கள்'' என்பதல்ல, ''எனக்குக் கட்டளையிடுவீர்களோ ?'' என்பதுதான் சரி. இது நம்மை நோக்கிவரும் கேள்விதானே தவிர, நமக்குக் கொடுக்கப்பட்ட செயல்முறை அல்ல.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஜெப வாழ்வை உற்றுநோக்குங்கள். ஜெபக்கலையில் அவர் தேறிய வித்தகராயிருந்தார். ஒருமுறைகூட அவர் தமது தந்தையானவருக்குக் கட்டளை கொடுக்கவில்லை. மேசியாவைப்பற்றிய முதல் சங்கீதம் 2ஆம் சங்கீதமாகும். தந்தையானவர் தமது மகனிடம் என்ன சொன்னார் ?—'நீர் என்னுடைய குமாரன்; இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன். என்னைக் கேளும்; அப்பொழுது நாடுகளை உமக்குச் சுதந்தரமாக... கொடுப்பேன்'' (சங் 2:8). என்னைக் **''கேளும்''** என்றுதானிருக்கிறதே தவிர, எனக்குக் **''கட்டளையிடும்''** என்றில்லையே!

இயேசுவின் ஜெபவாழ்வைக் குறித்த இன்னொரு முக்கிய வேதப்பகுதியை எபிரெயர் நிருபத்தில் வாசிக்கிறோம். ''அவர் பூவுடலிலிருந்த நாட்களில், தம்மை மரணத்திலிருந்து இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கிருந்த பயபக்தியினால் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்'' (எபி 5:7,8). அவர் தமது பிதாவானவரை நோக்கிக் கண்ணீரோடு கதறினார்; அவருக்கு ஒருபோதும் கட்டளையிடவில்லை. கெத்சமனே தோட்டத்தில் ஆண்டவராகிய இயேசு அனுபவித்தது மரண வேதனை. தமது மூன்று சீடரைச் சற்று தூரத்தில் விட்டுவிட்டு, அவர் தந்தையானவர் முன்னர் முகங்குப்புற விழுந்து, ''தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னைவிட்டு அகலட்டும்'' என்று ஜெபித்தார். சற்றுப் பின்னர், ''நான் குடித்தாலன்றி இத்துன்பக்கிண்ணம் அகல

முடியாதென்றால், உமது திருவுளப்படியே ஆகட்டும்'' என்று ஒப்புக்கொடுத்தார் (மத் 26:39,42). பிரியமானவர்களே, இவ்வளவு தெளிவான உபதேசம், அதுவும் இயேசுவின் வாழ்க்கையிலிருந்தே, நமக்குத் தரப்பட்டிருக்கும்போது, ஜெபத்தில் கடவுளுக்குக் கட்டளையிடலாம் எனும் நூதன உபதேசத்திற்குச் சற்றும் இடங்கொடாதிருப்போம்.

இந்த இடத்தில், கடவுளது **பூரண** சித்தத்திற்கும், **அனுமதிச்** சித்ததிற்குமுள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடவுளது பூரண சித்தத்திற்கு அடிபணிந்து வாழ்வதே கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியாகும். நாம் அவரது அனுமதிச் சித்தத்திற்குள் நுழைந்துவிடக்கூடாது. இவையிரண்டிற்குமுள்ள வேறுபாடு என்ன ? தனது சிறு பிள்ளையைச் சாலையிலே அழைத்துக்கொண்டு செல்லும் ஒரு தகப்பனாரைக் கற்பனைசெய்துகொள்ளுங்கள். சாலையின் மறுபக்கத்திற்குப் போகவெண்டுமென்று பிள்ளை கேட்கிறது. அப்பா மறுக்கிறார். அந்த வேளையில் அவ்விதம் சாலையைக் கடப்பது எவ்வளவு அபாயம் என்று தந்தைக்குத் தெரியும். ஆனால் பிள்ளை நச்சரிக்கிறது. பிள்ளையின் நச்சரிப்பைத் தாங்கமுடியாமல், தகப்பனார் ''போ'' என்கிறார். இது தகப்பனாரின் பூரண விருப்பமல்ல, அவரது வெறும் அனுமதிதான்.

பழைய ஏற்பாட்டிலுள்ள ஓர் எடுத்துக்காட்டு நமக்குத் திட்டமான எச்சரிப்பு. கடவுள் தமது மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, பாலைவனத்தினூடே, வாக்குப் பண்ணப்பட்ட நாடாகிய கானானுக்கு அழைத்துக்கொண்டு சென்றார். இந்த விடுதலைப் பயணத்தின்போது, எங்களுக்கு இது இல்லையே, அது இல்லையே என்று மக்கள் முறுமுறுத்தனர். அசைவ உணவு நாடி அங்கலாய்த்தனர். கடவுள் கடலிலிருந்து ஒரு பெருங்காற்றை வரப்பண்ணி பாலைவனம் எங்கும் காடைகளைக் குவித்தார். இதைக் குறித்துத் திருமறை சொல்லுவதைக் கவனியுங்கள்: ''அவர்கள் விழுங்குமுன், பற்களிடையில் இறைச்சி

இருக்கையிலேயே, ஆண்டவரது சினம் மக்களுக்கு எதிராக மூண்டது'' (எண் 11:33). இச்சம்பவத்தைக் குறித்துச் சங்கீதப் புத்தகத்தில் இவ்விதம் வாசிக்கிறோம்: ''அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்; அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை (மெலிவை) அனுப்பினார்'' (சங் 106:15). நண்பரே, ஜெபத்தில் கடவுளிடம் சேரும்போது பயபக்தியைக் காத்துக்கொள்ளுங்கள்.

இன்னோர் எடுத்துக்காட்டைப் பார்க்கலாம். கடவுள் தமது மக்களை ஆண்டுவந்தார். அவர்களுக்கு அரசன் என்று ஒருவன் இல்லை. தமது தீர்க்கதரிசன வார்த்தையின் மூலம் கடவுள் அவர்களை வழிநடத்திவந்தார். ஆனால் ஒரு நாள் வந்தது. அப்பொழுது மக்கள் தீர்க்கன் சாமுவேலிடம் வந்து, ''மற்ற நாடுகளுக்கு இருப்பதுபோல எங்களுக்கும் ஓர் அரசனைக் கொடும்'' என்றனர் (1 சாமு 8:5). இந்த வேண்டுகோள் தீர்க்கன் சாமுவேலுடைய மனதை வெகுவாய்ப் பாதித்தது. அவர் கடவுளிடத்தில் ஜெபத்திற்காகச் சென்றார். சாமுவேலிடம் கடவுள் என்ன சொன்னார் தெரியுமா ?— ''நீ அவர்களைக்குறித்துக் கவலைப்படவேண்டாம். அவர்கள் உன்னைத் தள்ளவில்லை; என்னைத்தான் தள்ளினார்கள். அவர்கள் கேட்ட வேண்டுதலுக்கு நான் பதில் கொடுக்கிறேன். அவர்களுக்கு ஓர் அரசனைத் தரப் போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு. ஆனால் காலப்போக்கிலே அந்த அரசன் எவ்விதமாக நடந்துகொள்வான் என்பதையும் அவர்களுக்கு நீ எச்சரி.'' அருமைச் சகோதர சகோதரிகளே, நாம் எப்பொழுதுமே தேவனுடைய பரிபூரண சித்தத்தின் வளையத்திற்குள் நின்றுகொள்ள வேண்டுமே ஒழிய அவருடைய அனுமதிச் சித்தத்திற்குள் செல்லவேகூடாது.

இப்படிச் சொல்வதால், ''நம்முடைய வேண்டுதல்கள் எல்லாவற்றிற்கும் கடவுள் பதில் தரமாட்டாரோ'' என்று நினைக்கலாமா ? இல்லை. கடவுள் நம்முடைய ஜெபங்களுக்கு நிச்சயமாகப் பதில் அளிப்பார். ஆனால் இந்தப்

பதில்கள் பலவிதமாக இருக்கும். சில நேரங்களில் ''ஆம்'' என்றிருக்கும்; அநேக நேரங்களில் ''இல்லை'' என்றிருக்கும்; அடிக்கடி ''காத்திரு'' என்றிருக்கும்; அதிகமான நேரங்களில் ''அமைதிதான்'' பதிலாக இருக்கும். முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்கள் இந்தப் பதில்களுக்கு இடையே இருக்கக்கூடிய வேறுபாட்டினை அறிந்திருப்பார்கள். ஏனென்றால், எப்பொழுது கொடுக்கவேண்டும், என்ன கொடுக்கவேண்டும், எந்தப் பிள்ளைக்குக் கொடுக்க வேண்டும் என்பது தந்தைக்குத்தான் தெரியும். ஜெபமானது 'கடவுளை' மாற்றுவதற்காக அல்ல; அவரது திட்டத்திற்கு ஏற்ப நாம் அமைந்துகொள்வதற்கு 'நம்மை' மாற்றுவதற்காகத்தான்.

அந்த அநீதியுள்ள நீதிபதி ஒருவன் இருந்தானே... ஒரு பெண் அவனிடத்தில் வந்து நச்சரித்தாளே... அந்த உதாரணம் எப்படி என்று நீங்கள் கேட்கலாம் (லூக் 15:1-8). ஜெபிக்கும்போது சோர்படைந்துவிடக்கூடாது என்பதை நமக்கு உணர்த்துவதற்காகவே அந்த உவமை கொடுக்கப்பட்டது. அந்த அநீதியுள்ள நியாயாதிபதி அவ்விதவைக்கு மனமகிழ்ச்சியோடு பதில் கொடுக்கவில்லை. மாறாக அவளுடைய தொணதொணப்பை அடக்குவதற்காகவே பதில் கொடுத்தான்.

பவுலடியாருக்கு தன்னுடைய உடலிலே ஒரு முள் இருந்தது (2 கொரி 12:7-9). ''முள்ளே, எனது உடலைவிட்டு வெளியே போ'' என்று பவுலடியார் ஒருபோதும் கட்டளையிடவில்லை. மாறாக, அது தன்னைவிட்டு நீங்கும்படி, மூன்றுதரம் கர்த்தரிடம் ''வேண்டிக்கொண்டார்.'' என்ன நடந்தது ? அவர் எதிர்பார்த்த பதிலைவிட வேறுபட்ட ஒரு பதிலைக் கடவுள் அவருக்குக் கொடுத்தார். அந்தப் பதிலைப் பவுலும் மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். அந்தப் பதில் என்ன ? ''என் கிருபை உனக்குப் போதும். உனது பலக்குறைவில் எனது பலம் பூரணமாய் விளங்கும்.'' இதுதான் வெற்றி, இதுதான் உண்மையான விடுதலை !

கடவுள் நமக்குத் தந்தைதான், நாம் அவருக்குப் பிள்ளைகள்தான்; அதே வேளையில் அவர் கடவுளாயிருப்பதால் நாம் பயபக்தியோடுதான் அவரிடம் செல்ல வேண்டும். அவரிடம் கேளுங்கள், அவரிடம் மன்றாடுங்கள், அவரை நோக்கிக் கதறுங்கள், அவருக்கு விட்டுக் கொடுங்கள், அவருக்குமுன் காத்திருங்கள், ஒருபோதும் அவருக்குக் கட்டளையிட முற்பட்டுவிடாதீர்கள். இதோ கடவுளிடமிருந்து நமக்கு வரும் கேள்வி: ''நான் பிதாவானால் என் கனம் எங்கே ? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே ?'' (மல் 1:6). நாம் கடவுளுக்குப் ''பிள்ளைகளாய்'' இருக்கும் அதே நேரத்தில் அவருக்குப் ''பணியாளராகவும்'' இருக்கிறோம். நமது சிலாக்கியங்கள் நமது பயபக்தியைக் குலைத்துவிடக்கூடாது.

நெடுங்காலமாய் உங்கள் வாழ்வில் பதிலளிக்கப்படாத ஒரு ஜெபம் இருக்கலாம். *''உம் சித்தம் தேவா ஆகட்டுமே''* என்று சொல்லுங்கள். இவ்வித ஜெபம் விசுவாசக் குறைவை அல்ல, விசுவாசத்தின் உறுதியையும் நம்பிக்கையின் அடையாளத்தையும்தான் காட்டுகிறது. நமக்கு உசிதமானது எதுவென்று தேவனறிவார் !

2

பிசாசைக் குற்றம்சாட்டக்கூடாது.

சாத்தானைக் குறித்தும் அசுத்த ஆவிகளைக் குறித்தும் நாம் பேசுகின்ற வேளையில் இரண்டு ஓரங்களைத் தவிர்க்கவேண்டும்: பிசாசே கிடையாது, பிசாசினுடைய தாக்கமும் கிடையாது என்பது ஓர் ஓரக் கொள்கை. மற்றொன்று, நம்முடைய எல்லாத் தோல்விகளுக்கும் பிசாசுதான் காரணம் என்பது.

ஒரு பேருந்து நிலையத்தின் நுழைவாயிலின் அருகே ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தானாம். கறுத்த, கனமான கம்பளியைப் போர்த்திக்கொண்டு அவன் அழுதுகொண்டு உட்கார்ந்திருந்ததைப் பார்த்த ஒரு பிரசங்கியார், அவனுடைய முகத்திலிருந்த அந்தக் கம்பளத்தை நீக்கிவிட்டு, "ஏன் அழுதுகொண்டிருக்கிறாய் ?" என்று கேட்டாராம். அதற்கு அவன், "நான்தான் பிசாசு; இந்த வட்டாரத்துக் கிறிஸ்தவ மக்கள் தாங்கள் செய்ய விரும்பிய எல்லாவற்றையும் மனம் போல் செய்துவிடுகின்றனர்; கடைசியில் எல்லாம் இந்தப் பிசாசினால்தான் என்று என்னைக் குறைசொல்லுகின்றனர்" என்றானாம். அப்பொழுது அவனிடத்தில், "நீ கவலைப் படாதே, இந்தத் தவற்றைக் கிறிஸ்தவர்களுக்குச் சுட்டிக் காட்டி அவர்களைத் திருத்துகிறேன்" என்று அவர் சொன்னாராம்!

சோதனைகளைக் குறித்துத் திருமறை போதிப்பதைக் கவனியுங்கள்: "ஒவ்வொருவரும் **தமது சொந்தத்** தீய நாட்டத்தினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப் படுகின்றனர். பின்னர் தீய நாட்டம் கருத்தரித்து பாவத்தைப் பெற்றெடுக்கிறது. பாவம் முழுவளர்ச்சியடைந்து சாவை விளைவிக்கிறது. என் அன்புச் சகோதரரே, ஏமாந்துபோக வேண்டாம்" (யாக் 1:14-16). இதுதான் உண்மை. எது முதலாவது வருகின்றது ? நம்முடைய சொந்த விருப்பங்கள். இந்த சுயநாட்டங்கள் நம்மைச் சோதனைக்குள் வழிநடத்து கின்றன. சோதனைக்கு நாம் விட்டுக்கொடுக்கும்போது அது பாவமாகின்றது. அந்தப் பாவத்திலேயே நாம் தொடர்ந்து உழன்றுகொண்டிருக்கும்போது அது மரணத்தில் முடிவடை கின்றது. இந்த வசனங்களிலிருந்து நாம் என்ன விளங்கிக் கொள்கிறோம் ? கிறிஸ்துவைப் பிசாசு எப்படி சோதித்தானோ அவ்வண்ணமாக நம்மையும் **சோதிக்க** மட்டும்தான் பிசாசி னால் முடியும். நம்முடைய ஒத்துழைப்பு இல்லாமல் நம்மைத் **தோற்கடிக்க** அவனுக்கு முடியாது.

நமது ஆதிப்பெற்றோரின் முதலாவது பாவத்தைக் கவனியுங்கள். அவர்களுடைய பாவத்திற்குப் பிசாசு மட்டுமே காரணமாக இருந்திருப்பானேயானால், கடவுள் சாபத்தை அவனுக்கு மட்டுந்தானே கொடுத்திருப்பார்! ஆதாமையும் ஏவாளையும் ஆண்டவர் சபிக்கவேண்டிய அவசியமில் லையே. வியர்வை சிந்தி உழைக்கவேண்டும் எனும் சாபத்தை ஆதாமுக்கும், குழந்தைப்பேற்றின்போது தாங்கமுடியாத வேதனை என்பதை ஏவாளுக்கும் ஆண்டவர் ஏன் கொடுத் தார் ? ஒரு கொலைகாரன் கொலையின் ஆவியின் மீது தன்னுடைய குற்றத்தைச் சுமத்திவிடமுடியாது. ஒரு விபச் சாரக்காரன் இச்சையின் ஆவியின்மீது தன்னுடைய குற்றத்தைச் சுமத்திவிடமுடியாது. ஒரு திருடன் பொரு ளாசையின் ஆவியின் மீது தன்னுடைய குற்றத்தைச் சுமத்தி விடமுடியாது. தன்னுடைய வீழ்ச்சிகளுக்கான காரணத்தை தார்மீகமாக அவனவன் ஏற்றுக்கொள்ளவேண்டும். எனவே தான் ஆண்டவர் நமக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கும் போது, "எங்களுடைய" பாவத்தை "எங்களுக்கு" மன்னியும் என்று சொல்லச் சொன்னார் (லூக் 11:4). எப்பொழுதும் இந்தச் சத்தியத்தை நம்முடைய மனதிலே ஆழமாய் நாம் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

கிறிஸ்தவ வட்டாரத்தில் பரவலாக அங்குமிங்கும் காணப்படுகின்ற தவறானதொரு செயல்பாடு என்னவென்றால் பிசாசைக் கட்டுதல். பிரியமானவர்களே, பிசாசைக் கட்டவும் முடியாது, அவனைக் கட்டுவதற்கு நாம் முயற்சிக்கவும் கூடாது. பிசாசைக் கட்டுவதற்குச் சாதகமாய்ச் சொல்லப்படுகின்ற வசனப்பகுதி மத்தேயு 16:19. பேதுருவுக்கு இயேசு கூறின வார்த்தைகள் இவை. இதன் பொருள் என்னவெனில், விண்ணுலகத்திலிருந்து நமக்குத் தரப்படும் அதிகாரத்தை நாம் மண்ணுலகில் பயன்படுத்த முடியும் என்பதே. *பொது மொழிபெயர்ப்பு வேதம்* இவ்வசனத்தை இவ்விதம் தருகிறது: "விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும்; மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்." விண்ணரசிற்குள் ஆயிரமாயிரமாய் யூதர்களும் யூதரல்லாதவர்களும் நுழைவதற்காக அதைத் திறந்துவிட ஆண்டவர் பேதுருவைப் பயன்படுத்தினார். இங்கு சாத்தானைப் பற்றிய குறிப்பு ஒன்றுமில்லை. "பூலோகத்தில் நீ கட்டுவது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்" என்பது சாத்தானைக் குறித்தது என்று நாம் சொல்வோமானால், பரலோகத்திலும் பிசாசு இருக்கிறானா என்ற கேள்வியை எழுப்புகிறதல்லவா ?

பிசாசைக் கட்ட முயலுபவர்கள் மேற்கோள்காட்டும் இன்னொரு வேதப்பகுதி மத்தேயு 18:17,18 ஆகும். இப்பகுதி திருச்சபையின் ஒழுங்கு நடவடிக்கையைக் குறித்ததாகும். தவறுசெய்துகொண்டேயிருக்கும் நபர், தனிப்பட்ட ஆலோசனைக்குச் செவிமடுக்க மறுப்பாரானால், காரியம் எப்படிப்பட்டது என்பதைக் கணித்து, தேவையானால் அதைச் சபையினருக்குமுன் கொண்டுவரவேண்டும். திருச்சபை சொல்லுவதையும் அவன் கேட்க மறுத்தால் அவனை வெளியேயுள்ள ஒருவனைப்போலத்தான் நடத்தவேண்டும். இதனைபடுத்து இயேசு சொன்னது: "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும்

கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்." தமது திருவசனத்தின் அடிப்படையில் இயங்கும் தமது திருச்சபையின் நடவடிக்கைகளை ஆண்டவர் ஆமோதித்துத் தமது முத்திரையை அதின்மீது பதிக்கிறார் என்பதே இதன் பொருள்.

"கட்டுவது ... கட்டவிழ்ப்பது" என்பது யூதக் கலாச்சாரத்தில் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்பட்ட சொற்களாகும். மத்தேயு 16இலும் 18இலும் அதே அர்த்தத்தில்தான் இச்சொற்கள் கையாளப்பட்டுள்ளன. மத்தேயு 16இல் நற்செய்திப் பணி குறித்த சூழமைவு. இயேசு தமது சீடர்களைப் பார்த்து, "மக்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் ?... நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் ?" என்று வினவினார். பரலோக வெளிப்பாட்டுடன் பேதுரு இவ்விதம் பதிலளித்தான்: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து!" உடனே இயேசு அவனைப் பார்த்து, "நான் உன்னிடம் சாவிகளைத் தருகிறேன்; அவற்றைக்கொண்டு நீ யூதருக்கும் யூதரல்லாதோருக்கும் விண்ணரசைத் திறந்துவிடு. விண்ணுலக அதிகாரத்தை நீ மண்ணுலகில் பயன்படுத்தலாம்" என்றார். மத்தேயு 18ஆம் அத்தியாயமோ சபைக்கு வெளியே இருப்பவருக்கான நற்செய்திப்பணியைக் குறித்ததல்ல, சபைக்கு உள்ளே இருப்பவருக்கான ஒழுங்குமுறையைக் குறிப்பதாகும். விசுவாசியொருவன் நெடுகவே ஒழுங்கீனமாய் நடந்துவந்தால், அவன் மனந்திரும்புகிறானா இல்லையா என்று கவனித்து, அவனது பாவம் எப்படிப்பட்டது என்பதைப் பொறுத்து, "நாங்கள் உன்னை மன்னித்துவிடுகிறோம்" அல்லது "நாங்கள் உன்னைச் சபையைவிட்டு விலக்குகிறோம்" என்று சொல்லிவிடத் திருச்சபைக்கு இங்கு அதிகாரம் தரப்படுகிறது. திருச்சபையாக எடுக்கப்படும் தீர்மானத்தைப் பரலோகம் அங்கீகரிக்கிறது. அதுதான் இங்கு பொருள்.

பிரியமானவர்களே, நாம் பிசாசை விரட்டமுடியும் (மத் 10:1,8); பிசாசுக்கு இடங்கொடுக்காமல் இருக்கமுடியும் (எபே

4:27); பிசாசுக்கு எதிர்த்து நிற்கமுடியும் (யாக் 4:7); பிசாசுக்கு எதிராக விழிப்பாயிருக்க முடியும் (1 பேது 5:8); ஆனால் அவனைக் கைது செய்யமுடியாது! திருமறை அனுமதித் துள்ள வரம்புகளை மீறாதீர்கள். இக்காலத்தில் பிசாசு விடுதலையோடு சுற்றித்திரியவேண்டுமென்பதே அவை னைக் குறித்து தேவனது ஏற்பாடு. பலவேளைகளில் இயேசு பிசாசை முகமுகமாய்ச் சந்தித்தார். அதிகபட்சம் அவர் அவனைப் பார்த்து, “எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே” என்றுதான் கூறினார். அதற்குமேல் அவர் ஒன்றும் செய்ய வில்லை. பிசாசு கட்டப்படுகின்றதான காலம் இதுவல்ல. ஆயிர வருட அரசாட்சியில்தான் அது நடைபெறும். வெளிப் படுத்துதல் 20:1-3, “ஒரு தூதன் பாதாளத்தின் திறவு கோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் ஆண்டுகள் கட்டிவைத்து, அந்த ஆயிரம் ஆண்டுகள் முடியும்வரை அது மக்களை ஏமாற்றாதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரை போட்டான். அதற்குப் பின்பு அது சிறிது காலத்திற்கு கட்டவிழ்த்துவிடப்படவேண்டும்.” இன்றைக்கே நீங்கள் பிசாசைக் கட்டிவிட்டால், அவனைத் துரத்திவிடமுடியாது; நீங்கள்தான் அவனைத் தூக்கிக்கொண்டுபோகவேண்டும்!

பிசாசை நோக்கி அல்ல, ஆண்டவரை நோக்கியே நாம் ஜெபத்தில் பேசவேண்டும். கெத்சமனே தோட்டத்தில் தாம் அனுபவித்ததை இயேசு, “அந்தகாரத்தின் அதிகாரத்தின்” வெளிப்பாடு என்று குறிப்பிட்டார் (லூக் 22:53). அதற்காக அவர் செய்ததெல்லாம் பிதாவானவரை நோக்கிப் பயபக்தி யுடன் ஏறெடுத்த ஜெபமே (எபி 5:7,8). ஒரு கோணத்தில் பார்த்தால், பலவானாகிய சாத்தானை ஏற்கனவே ஆண்டவர் கட்டிவிட்டார். “துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு வெளியரங்கமான கோலமாக்கி, அவை களின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்” (கொலோ 2:15).

சாத்தானின் ஆயுதங்களைப் பிடுங்கிக்கொண்டுதான் இயேசு அவனைச் சிலுவையின்மீது தோற்கடித்தார். “பலவா னாகிய” சத்துருவை, “அவனிலும் பலவானாகிய” ஆண்ட வர் கட்டிவிட்டார் (லூக் 11:20-22). இந்த வெற்றியின் மூலமாகத்தான் பிசாசின் ஆதிக்கத்தில் இருக்கும் மக்களை நாம் விடுவித்து அவர்களை இறையரசிற்குள் கொண்டுவர முடிகிறது.

சாத்தானைப் “பாதாளத்திற்குப் போ” என்றும் சொல் லாதீர்கள். அவன் இவ்வுலகில்தான் சுற்றிவர ஆண்டவர் விட்டுவைத்திருக்கிறார். ஆயிர வருட அரசாட்சியின் போதுதான் அவன் “பாதாளத்தில்” தள்ளப்படுவான் (வெளி 20:1-3). சாத்தானை எரித்துவிடவும் முயற்சிக்காதீர்கள். அது உங்கள் வேலையல்ல. அது எப்பொழுது நடக்குமென்று 2 தெசலோனிக்கேயர் 2:8இல் வாசிக்கிறோம்: “அந்த அக்கிரமக்காரனைக் கர்த்தர் தமது வாயின் சுவாசத்தினால் அழித்து, தமது வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்.” இன்று பூவுலகில் சாத்தான் இருக்கத் தேவையில்லையென்றால், கடவுள் அவனை என்றோ வறுத்தெடுத்திருப்பார்!

அப்படியே, சாத்தானைத் தூஷிக்கவும், சபிக்கவும் கூடாது. துர்வுபதேசக்காரரைக் குறித்து அப்போஸ்தலன் யூதா எழுதியிருப்பதைக் கவனியுங்கள்: “சொப்பனக் காரராகிய இவர்களும் மாம்சத்தை அசுசிப்படுத்திக் கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி, மகத்து வங்களைத் தூஷிக்கிறார்கள். மோசேயின் உடலைக் குறித்துப் பிசாசுடன் பிரதான தூதனாகிய மிகாவேல் தர்க்கித்துப் பேசியபோது அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல், ‘கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக’ என்று சொன்னான்” (யூதா 8,9). பிரதான தூதனே இவ்வளவு கவனமாகவும் கட்டுப்பாட்டுடனும் இருக்கும்போது, நாம் எவ்வளவு கவனமாயிருக்கவேண்டும்! வரம்பை மீறி வம்பை விலைகொடுத்து வாங்கிவிடாதீர்கள்!

பிசாசைக் கட்டுதல், அவனைப் பழித்தல் போன்ற செயல்களுக்கு மக்கள் தானியேலின் ஜெபத்தைச் சாதகச் சான்றாய் மேற்கோள் காட்டுவார்கள் (தானி 9,10). தானியேலின் ஜெபம் விண்ணகத்தில் உடனே கேட்கப்பட்டது. ஆனால் அதற்கான பதில் வந்துசேர்வதில் தாமதம் ஏற்பட்டது. உடனே தானியேல் பெர்சியா நாட்டு மன்னனைப் பார்த்து எதுவும் பேசவில்லை. மாறாக, அவன் திருப்பிரசன்னத்தில் பொறுமையாக விண்ணப்பம்பண்ணிக்கொண்டேயிருந்தான். ஒரு தேவ தூதன் மூலமாகக் கடவுள் பெர்சியா மன்னனுடன் இடைபட்டார். "பெர்சியா ராஜாவே, நீ கீழே இறங்கிவா; என் ஜெபத்திற்கான பதிலைத் தடுத்து நிறுத்திக்கொண்டிராதே" என்று தானியேல் சத்தமிடவில்லை. அவன் அவ்விதப் பாணியில் ஜெபிக்கவேயில்லை. மாறாக "*ஆண்டவரே,* கேளும்; *ஆண்டவரே,* மன்னியும்; *ஆண்டவரே,* கவனியும்" என்றுதான் ஜெபித்துக்கொண்டிருந்தான் (தானி 9:19).

பிரியமானவர்களே, நாம் திருமறை போதிக்கும் மாதிரியையே பின்பற்றுவோம். ஜெபத்தில் பிசாசையல்ல, ஆண்டவரையே நினைத்துக்கொண்டிருங்கள். கிருபாசனம் நமக்காய்த் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது (எபி 4:16). கிறிஸ்துவின் இரத்தம் நமக்காய்த் தெளிக்கப்பட்டிருக்கிறது (எபி 10:19-22). பரலோகத்தில் கிறிஸ்து நமக்காய்ப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் (1 யோ 2:1). உலகில் இருப்பவனைவிட நமது உள்ளில் இருப்பவர் பெரியவர் (1 யோ 4:4). இவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். ஆன்மீகம் என்ற பெயரில் திருமறைப் போதனையிலிருந்து அடிக்கடி பிசாசு நம்மைத் திசைதிருப்பிவிடுவான். நாம் வஞ்சிக்கப்பட்டுவிட்டோம் என்பதே நமக்குத் தெரியாதுபோய்விடும். **ஆன்மீகவாதிகளாய்** இருப்பது முக்கியம், ஆனால் **திருமறைவாதிகளாய்** இருப்பது அவசியம்!

3

பிதாவானவரை மறந்துவிடக்கூடாது.

யாரை நோக்கி ஜெபிக்கவேண்டுமென்று இன்றையக் கிறிஸ்தவர்களுக்குச் சரியாகப் போதிக்கப்படவில்லை. பலரும் "இயேசு, இயேசு" என்று அவரை நோக்கியே ஜெபிக்கிறார்கள்; ஏனெனில், அப்படித்தான் பிரசங்கிமார் பலரும் ஜெபிக்கிறார்கள். ஆனால் நாம் ஜெபத்தில் பிரதானமாக, பரலோகத்திலிருக்கிற "பிதாவை" நோக்கியே ஜெபிக்கவேண்டும் என்று திருமறை நெடுகவே, திட்டவட்டமாகப் போதிக்கிறது. தமது மலைப்பிரசங்கத்தில் இயேசு நமக்குப் போதித்துள்ளதைக் கவனியுங்கள்: "நீ ஜெபம் பண்ணும் போது... அந்தரங்கத்திலிருக்கிற உன் **பிதாவை** நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் **பிதா** வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" (மத் 6:6). அதைத் தொடர்ந்து அவர் சொன்னது, "நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் **பிதாவே...**" (வச 9). இதைவிடத் தீர்க்கமாக, தெளிவாக, வார்த்தைகள் இருக்கமுடியுமா ?

இதைக்குறித்த தெளிவான உபதேசத்தை இயேசுவானவர் இன்னொரு இடத்தில் கொடுத்துள்ளார். யோவான் 16:23,24, "அந்த நாளிலே நீங்கள் **என்னிடத்தில்** ஒன்றும் கேட்கமாட்டீர்கள்...நீங்கள் என் நாமத்தினாலே **பிதாவினிடத்தில்** கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். இதுவரை நீங்கள் **என் நாமத்தினாலே** ஒன்றும் கேட்கவில்லை. கேளுங்கள், அப்பொழுது உங்கள்

சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிப் பெற்றுக்கொள்வீர்கள்.'' இதன் பொருள் என்ன? நமதாண்டவர் தமது சீடரோடு நடந்து, அவர்களோடு ஊழியம்செய்த, அவர்களுக்குப் போதித்துவந்த மூன்றரை ஆண்டு காலத்தில், அவர்கள் தங்களுக்குத் தேவையானதையெல்லாம் நேரடியாக அவரிடமே கேட்டுப் பெற்றுக்கொண்டனர். ஆனால் இந்த வசனப் பகுதியில், ஆண்டவர் வரவிருந்த இன்னொரு யுகத்தைப் பற்றிப் பேசினார். ''**அந்த நாளில்**'' நீங்கள் ''என்னிடம்'' ஒன்றும் கேட்கமாட்டீர்கள் என்றார் (யோ 16:23). அடுத்த வசனத்தில் அதை இன்னும் விளக்கிச்சொல்லுகிறார்: ''**இதுவரை**'' நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை (வச 24). இதுதான் யுகமாற்றம் (dispensational change) என்பது. அதே அத்தியாயத்தில் தொடர்ந்து வாசிக்கையில் ஆண்டவர் இப்போதனைக்கான விளக்கத்தையும் காரணங்களையும் தருவதைக் காணலாம். வசனங்கள் 25-27, ''இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன். காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களோடு பேசாமல் பிதாவைக்குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன். அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள். உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேனென்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை... நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால், **பிதா தாமே** உங்களைச் சிநேகிக்கிறார். நான் பிதாவிடமிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவிடம் போகிறேன்.''

மகதலேனா மரியாளைப் பார்த்து, அந்தக் கல்லறைத் தோட்டத்தில் அவளுக்குத் தரிசனமளித்த வேளையிலே, அருள்நாதர் கூறிய வார்த்தைகள் இந்த யுகத்தில் நமக்குக் கிடைத்துள்ள சிலாக்கியத்தை விளக்குகின்றன: ''என் தந்தையும் உங்கள் தந்தையும், என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் ஏறிப்போகிறேன்'' (யோ 20:17). வேறு

வார்த்தைகளில் சொன்னால், ''எவரிடம் நான் ஏறிப் போகிறேனோ அவர் எனது தந்தை மட்டுமல்ல, உங்கள் தந்தையும்கூட!'' புதியதோர் உறவு! அல்லேலூயா!

நமக்குப் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கொடுப்பது யார்? இயேசு கிறிஸ்துதானே? இதைக் குறித்து யோவானின் வார்த்தைகள் இதோ: ''மனந்திரும்புதலுக்கென்று நான் தண்ணீரால் உங்களுக்குத் திருமுழுக்கு கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னைவிட வலிமை மிக்கவர்; அவரது மிதியடிகளைத் தூக்கிச் செல்லக்கூட எனக்குத் தகுதியில்லை; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்குத் திருமுழுக்கு கொடுப்பார்'' (மத் 3:11). ஆம், கிறிஸ்துவானவர்தான் நமக்கு ஆவியின் ஞானஸ்நானம் கொடுப்பவராயிருந்தாலும், பரிசுத்த ஆவிக்காக நாம் **பிதாவிடமே** கேட்கவேண்டுமென்று ஆண்டவர் போதித்திருப்பதைக் கவனித்திருக்கிறீர்களா? ''பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம **பிதாவானவர் தம்மிடம்** வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?'' (லூக் 11:13).

நண்பரே, யாரை நோக்கி ஜெபிக்கவேண்டும் என்பதற்கான போதனையையும், நன்மாதிரியையும் நெடுகவே திருவசனத்தில் உங்களால் பார்க்கமுடிகிறதா? அது உங்களுக்குப் புரிகிறதா? நாம் வாழும் இந்த யுகத்திற்காகப் படிப்படியாய் வந்த வெளிப்பாடு இது. இந்த முக்கியமான சத்தியத்தை ஆதிச் சீடர்கள் மிகச் சீக்கிரத்திலேயே விளங்கிக்கொண்டார்கள் என்பதனை அறியும்போது உண்மையிலேயே நான் பரவசமடைகிறேன். இதோ ஓர் எடுத்துக்காட்டு: இயேசு கிறிஸ்துவைக் குறித்து இனியும் நீங்கள் பறைசாற்றக்கூடாது என்று அப்போஸ்தலர்கள் வன்மையாய் எச்சரிக்கப்பட்டார்கள். இந்தக் காரியத்தை தங்களது நண்பர்களோடு அப்போஸ்தலர்கள் சென்று

பகிர்ந்துகொண்டார்கள். உடனே அவர்கள் கடவுளை நோக்கி ஏறெடுத்த வேண்டுதலைக் கவனியுங்கள்: "ஆண்டவரே, வானுலகையும் மண்ணுலகையும்... படைத்தவர் நீரே... இப்பொழுதும், ஆண்டவரே, அவர்கள் அச்சுறுத்துவதைப் பாரும். உமது அடியார் முழுத்துணிவுடன் உமது வார்த்தையை எடுத்துக்கூற அருள்தாரும்... உமது பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் பெயரால்... அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படிச் செய்யும்" (அப் 4:24-30). எவ்வளவு தெளிவாகத் தங்கள் விண்ணப்பத்தைப் **பிதாவிடம்** சமர்ப்பித்தார்கள் என்றும், இயேசுவை, "உமது பரிசுத்த பிள்ளை" என்று குறிப்பிட்டதையும் பார்த்துத் தெளிவடையுங்கள். இந்த ஜெபத்தைத் திரும்பத் திரும்பப் படித்துப் பாருங்கள். நமது ஜெபங்களெல்லாம் வேதாகமப் பாணியிலேயே அமையவேண்டும்.

பிதாவானவரையே நோக்கி ஜெபிக்கும் பழக்கம் அப்போஸ்தலன் பவுலிடம் தொடர்ந்தேர்ச்சியாய்க் காணப்பட்டது—

எபேசியர் 2:18, "ஒரே ஆவியினாலே **பிதாவிடம்** சேரும் சிலாக்கியத்தைக் கிறிஸ்து மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்." **பிதாவை** நோக்கி, கிறிஸ்து மூலமாய், ஆவியானவரின் உதவியோடு ஜெபிக்கிறோம்.

எபேசியர் 3:14, "நமது கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் **பிதாவை** நோக்கி முழங்கால்படியிட்டு..." என்னே அழகு!

இவையெல்லாம் இங்கொன்றும் அங்கொன்றுமான வசனங்களல்ல. நெடுகவே புதிய ஏற்பாட்டில் இந்த முறைதான் பின்பற்றப்பட்டிருக்கிறது—

ரோமர் 8:15, "திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், **அப்பா பிதாவே** என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்." பிதாவை நோக்கி "அப்பா" என்று கதற அவரது ஆவியானவர் துணைசெய்கிறார்!

நமது ஜெபங்களைப் **"பிதாவாகிய தேவனை"** நோக்கி ஏறெடுக்கும்போதுதான் கிறிஸ்துவானவரின் இன்றைய விண்ணகப் பணியை நன்றாகப் புரிந்துகொள்ளவும் அதை அனுபவிக்கவும் நமக்கு முடிகிறது. இறைமகனான இயேசுவானவர் நமது தேவைகளுக்காய்ப் பிதாவானவரிடம் பரிந்துபேசும் பிரதான ஆசாரியராய் நமக்காக அங்கு இருக்கிறார். இச்சத்தியத்தைச் சித்தரிக்கும் ஒரு வசனப்பகுதி, எபிரெயர் 4:14-16, "வானங்களின் வழியாயப் பரலோகத்திற்குப்போன தேவ குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியால், நாம் பண்ணிய அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போம். நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்க முடியாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவி செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தை அணுகிச் செல்வோமாக!"

நாம் பிதாவானவரிடம் செல்லும்போது, அவருக்கு முன்பாக நமக்காகப் பரிந்துபேசும் பிரதான ஆசாரியராய் ஆண்டவராகிய இயேசு இருக்கிறார். இதை அப்போஸ்தலன் யோவான் இப்படி எழுதினான்: "ஒருவர் பாவம் செய்ய நேர்ந்தால் தந்தையிடம் பரிந்துபேசுபவர் ஒருவர் நமக்கு இருக்கிறார்; அவரே மாசற்ற இயேசு கிறிஸ்து" (1 யோ 2:1). நாம் நமது பாவங்களைப் பிதாவானவராகிய தேவனிடம் அறிக்கையிடும்போது, பாவத்தைப் பாராத சுத்தக் கண்ணராகிய அவரது மும்மடங்கு பரிசுத்தத்திற்குமுன் நம்மை ஏற்புடையவர்களாய் மாற்றுவதற்கு கிறிஸ்துவானவர் தமது நீதியாகிய சால்வையை நம்மீது போர்த்திவிடுகிறார்.

கிறிஸ்து நமக்காகப் பரிந்துபேசுகிறவர் மட்டுமல்ல, அவர் நமது இரட்சிப்பை நிறைவுபடுத்த இடைவிடாது வேண்டுதல்

செய்கிறவராயும் இருக்கிறார். ''தம் வழியாகக் கடவுளிடம் வருபவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படி அவர் எப்பொழுதும் உயிரோடிக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்'' (எபி 7:24,25).

இவ்விதமாய், பிதாவை **நோக்கி,** இயேசுவின் **பெயரால்,** பரிசுத்த ஆவியானவரின் **வல்லமையோடு** ஜெபிக்க வேண்டுமென்ற வேதப் போதனையை நாம் பின்பற்றும்போது தான் தெய்வத்துவத்தின் திருத்துவத்தை நாம் நடைமுறையில் விளங்கிக்கொள்ளமுடியும்.

அப்படியானால், நாம் ஒருபோதும் இயேசுவை நோக்கி ஜெபிக்கக்கூடாது என்று அர்த்தமா **?** இயேசுவை நோக்கி வேண்டுவது ஒரு விதிவிலக்காயிருக்கலாம்; அது பொதுவான விதியாயிருக்கமுடியாது. இரத்தசாட்சியாய் ஸ்தேவான் மரித்தபோது அவர் ஏறெடுத்த ஜெபத்தைச் சிலர் சுட்டிக்காட்டுவர். அவன் கல்லெறியப்பட்டு, இரத்தக் கோரமாய் மரித்துக்கொண்டிருந்த வேளையில், வானம் திறந்திருக்கிறதைக் கண்டு, அவன் சொன்னது, ''இதோ, வானம் திறந்திருப்பதையும், மனுமகன் கடவுளது வலப் பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன்'' (அப் 7:55). ஏற்கனவே பிதாவின் வலப்பக்கத்தில் உட்கார்ந்துவிட்ட இயேசுவானவர் இப்பொழுது எழுந்து நிற்பதைக் கண்டு ஸ்தேவான் அதிசயித்தான். அந்தத் தரிசனத்தால் ஊக்குவிக்கப்பட்ட அவன், ''ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும்'' என்று அதை ஓர் ஒப்புவிப்பாகத்தான் சொன்னான் (வச 60). இதை மாதிரி ஜெபமாய் எடுத்துக்கொள்ள முடியாது. நெடுகவே வேதத்தில் இழைபோல் ஓடும் போதனையிலிருந்துதான் உபதேசத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமே தவிர, இதுபோன்ற ஒரு நிகழ்வின் அடிப்படையில் உபதேசத்தை நிலைநிறுத்தமுடியாது.

''இயேசுவே, என்னை ஆசீர்வதியும், என்னைக் காப்பாற்றும், என்னோடு வாரும்'' என்றெல்லாம் சிறு பிள்ளை

களுக்கு நாம் கற்றுக்கொடுக்கலாம். ஆனால் நாம் குழந்தைப் பருவத்தைவிட்டு வளர்ந்துவரும்போது வேதம் போதிக்கும் செயல்முறைகளையே தழுவிக்கொள்ளவேண்டும். அவ்விதமே, கிறிஸ்தவரல்லாத பின்னணிகளிலிருந்து மனந் திரும்பி வருவோருக்கும் நாம் சரிவர ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கவேண்டும். நாம் வெகுகாலம் ஜெபத்தில் தவறான பழக்கங்களிலேயே ஊறிவிட்டதால், திடீரென்று இவ்விதமாய் மாற்றிக்கொள்வது அவ்வளவு சுலபமல்ல. ஆனால் நமது தியானப் பயிற்சிகள் யாவும் வேதப்பாணியிலேயே அமைந்துவிடுவதற்கு நம்மாலான அத்தனை முயற்சிகளையும் எடுக்கவேண்டும்.

பிதாவானவரும், குமாரனானவரும், ஆவியானவரும் சரிசமமானவர்கள். ஆனால் அவர்கள் தங்களுக்குள் ஒரு வரிசையைக் கடைப்பிடிக்கிறார்கள். அந்த வரிசையை நாம் நமது தியானப் பயிற்சிகள் எல்லாவற்றிலும், குறிப்பாக ஜெபத்தில், நினைவிற்கொண்டு செயல்படவேண்டும். பிதாவானவரை மறந்துவிடக்கூடாது!

4

மத்தியஸ்தர்களைத் தேடக்கூடாது.

"உங்கள் ஜெபத்தேவைகளை உடனே எங்களுக்கு அனுப்பிவையுங்கள்; நாங்கள் உங்களுக்காக 24 மணி நேரமும் ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்'' என்பதுதான் எங்கு பார்த்தாலும் பிரசங்கிமாரின் முழக்கமாயிருக்கிறது. வேதனையில் தவித்து, வேறு வழியில்லையே என்று புலம்பிக் கொண்டிருக்கும் மக்களுக்கு இவ்வித விளம்பரங்கள் வேதப்பாணியிலே சரிதானா என்று எண்ணிப்பார்ப்பதற்குக் கூட நேரமில்லை. இந்த முக்கியமான பொருளைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது என்றறிய திறந்தமனதுடன் இவ்வத்தியாயத்தை வாசியுங்கள்.

ஆசாரியர்கள் (மதக் குருக்கள்), ஆசாரியர்களல்லாத சாதா மக்கள் என்று பழைய ஏற்பாட்டில் இருவகுப்பினர் இருந்தனர். புதிய ஏற்பாட்டுக் காலத்திற்குள் வரும்போது இது அப்படியே மாற்றப்பட்டுவிட்டது. இன்று இயேசு கிறிஸ்துவின் சபையில் இருமட்டத்தினர் என்றோ, இருதரப் பிரஜைகள் என்றோ கிடையாது. 1 பேதுரு 2:5ஐக் கவனி யுங்கள்: "நீங்களும் உயிருள்ள கற்களாயிருந்து, ஆவிக் குரிய இல்லமாகக் கட்டி எழுப்பப்பட்டு வருகிறீர்கள். இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாகவும் இருக்கிறீர்கள்.'' 9ஆம் வசனத்தில் அப்போஸ்தலன் இதே சத்தியத்தைத் திரும்ப வலியுறுத்துகிறான்: "நீங்கள் தேர்ந் தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரச குருக்களின் கூட்டத் தினர், தூய மக்களினத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள். எனவே உங்களை இருளினின்று தமது வியத்தகு

ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி.'' திரும்பத் திரும்ப அடுத்தடுத்து இக்கருத்து சொல்லப்பட்டிருப்பது இந்தப் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கா கவே. ஆம், புதிய ஏற்பாட்டைப் பொறுத்தவரையில் குருக்கள், குருக்களல்லாதோர் என்று இருவகையினர் கிடையாது, கிடையவே கிடையாது. அது எந்தச் சபையாயிருந்தாலும், சபைப்பிரிவாயிருந்தாலும் இதுதான் திருவுபதேசச் சட்டம்.

இறைமக்கள் அத்தனைபேரும் ஆசாரியர்களே! (ஆசா ரியர் என்பதைவிட ஆச்சாரியர் என்பதே சரியான சொல். ஆசாரி என்பது இன்று பொதுவாக தச்சனையே குறிக்கும்.) விசுவாசிகளனைவரும் ஆச்சாரியர்களே என்பதனை மறுத்து நிரூபிப்பதற்கு புதிய ஏற்பாட்டிலே வசனங்களே இல்லை. இந்தப் புதிய ஒழுங்கு பெந்தெகொஸ்தே நாளன்று அமுலுக்கு வந்தது. மக்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, நவநாவுகளில் பேசித் தேவனைப் புகழத் தொடங்கினார்கள். இதைப் பார்த்தவர்களுக்கு ஒன்றுமே புரியாததால் அவர்கள் அப்போஸ்தலரைப் பார்த்து, "இது என்ன ?'' என்று வினவி னார்கள். உடனே தீர்க்கன் யோவேல் மூலம் வந்திருந்த வெளிப்பாட்டினைப் பேதுரு மறுமொழியாய்க் கொடுத்தான்: "இறுதி நாட்களில் நான் **மாந்தர் யாவர்மேலும்** என் ஆவியைப் பொழிந்தருளுவேன்'' (அப் 2:17). "யாவர்மேலும்'' என்ற பதம் தேவப் பிள்ளைகள் அத்தனை பேரையும் உள்ள டக்கும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இப்படி இருக்க வில்லை. தீர்க்கர்கள், ஆச்சாரியர்கள் மற்றும் அரசர்கள் ஆகிய தலைவர்கள்மட்டுமே எண்ணெயால் அபிஷேகிக்கப் பட்டனர். அவர்கள் ஓர் உயர்மட்டத்தைச் சேர்ந்தவர்களா யிருந்தனர். இப்பொழுதோ அந்த அபிஷேகம் "யாவர்மேலும்'' என்றாகிவிடுகிறது. ஆண் பெண் என்ற பாகுபாடு கிடை யாது: "குமாரரும் குமாரத்திகளும்.'' வயது பாகுபாடு கிடை யாது: "வாலிபர், முதியோர்.'' வகுப்பு பாகுபாடு கிடையாது: "பணியாளர், பணிப்பெண்கள்'' (வேலைக்காரர், வேலைக் காரிகள்) (வச 17,18). கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற "எவனும்'' இரட்சிக்கப்படுவான், அபிஷேகிக்

கப்படுவான் (வச 21). ''அனைத்து விசுவாசிகளின் ஆச்சாரி யத்துவம்'' (Priesthood of all believers) எனும் இச்சத்தியம் கிறிஸ்தவ வாழ்வுக்கும் பணிக்கும் அடித்தளமானது. திருச் சபையின் எல்லாத் துறைகளிலும் இந்த உபதேசம் திரும்பக் கொண்டுவரப்படவேண்டும். 16ஆம் நூற்றாண்டில் மார்ட்டின் லூத்தர் கொண்டுவர முயன்ற சீர்திருத்தம் இதுவே. நீங்கள் சீர்திருத்தத் திருச்சபையினராய் (Protestants) இருந்தால், திருவசனத்திற்கு மாறாய்ச் செல்லுகின்ற எந்த உபதேசத் தையும் முழுமூச்சாய் எதிர்க்க (protest) வேண்டும். மற்றபடி நாம் சீர்திருத்தர்கள் அல்ல, சீர்குலைந்தவர்கள்!

ஜெபம் என்றால் என்ன? தேவனுடைய பிள்ளைகள் தங்கள் தந்தையாம் தேவனிடம் தங்களுக்குத் தேவை யானவைகளைக் கேட்பதே ஜெபம். ''கேளுங்கள், தரப்படும்; தட்டுங்கள், திறக்கப்படும்; தேடுங்கள், கிடைக்கும்'' என்றாரல்லவா இயேசு? (மத் 7:7). அதோடு அவர் நிறுத் தினாரா? இல்லை. அடுத்து அவர் சொன்னதைக் கவனி யுங்கள்: ''கேட்கிற **எவனும்** பெற்றுக்கொள்ளுகிறான்'' (வச 8). ''எவனும்'' என்பதில்தான் அழுத்தம் இருக்கிறது. கேட்கிற ''எவனும்'' பெற்றுக்கொள்ளலாமாம். அதைத் தொடர்ந்து இயேசு சொன்னது: ''தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந் திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதி யாக நன்மைகள் அளிப்பார் அல்லவா?'' (வச 11). நீங்கள் கடவுளின் பிள்ளையானால், கடவுள்தான் உங்கள் தந்தை யானவர்; அவரிடம் நேரடியாக, தங்குதடையின்றி, எதையும் கேட்கலாம்.

பரமேறுவதற்குமுன், இயேசுவானவர் தமது சீடர்களிடம் சொன்னது: ''நான் போகிறது உங்களுக்குப் பயனுள்ள தாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் (துணையாளன்) உங்களிடம் வரமாட்டார்... நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது... வேறொரு தேற்றர வாளனை அவர் உங்களுக்குத் தந்தருள்வார்'' (யோ 16:7;

14:16). இதன் பொருள் என்னவென்றால், ''நான் முதலாம் தேற்றரவாளன். நான் முதலாம் துணையாளன். நான் இன்னொரு தேற்றரவாளனை உங்களிடம் அனுப்புவேன். பரிசுத்த ஆவியானவரே அவர். அவரே இரண்டாம் தேற்றர வாளன்.'' பிரியமானவர்களே, இந்த இரு உதவியாளர்களும் (தேற்றரவாளர்களும்) எங்கே இருக்கிறார்கள்? முதலாம் தேற்றரவாளன் விண்ணுலகில் நமக்காய் அரியணையில் அமர்ந்திருக்கிறார் (ரோ 8:34). இரண்டாம் தேற்றரவாளன் மண்ணுலகிலிருக்கும் நமது இருதயத்திலேயே குடிகொண் டிருக்கிறார் (ரோ 8:26, 27). இது போதாதா? நமக்கு மூன் றாம் தேற்றரவாளன் தேவையோ?

இயேசுவை நமக்குக் கொண்டுவந்த மரியாளை ரோமன் கத்தோலிக்கர் வணங்குகிறார்கள். இயேசுவிடம் நம்மைக் கொண்டுவரும் பிரசங்கிமாரைப் புராட்டஸ்டண்டு கிறிஸ்த வர்கள் கதாநாயகராய் வணங்குகிறார்கள். இருதிறத்தாரும் முழுக்க முழுக்க மனந்திரும்பவேண்டும். ரோமன் கத்தோ லிக்கரும் புராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்களும் மீண்டும் வேதத்திற்குத் திரும்பிவரவேண்டும். ஓர் எச்சரிப்பை இங்கு விடுக்க விரும்புகிறேன்: ''கடவுள் நீங்கள் ஜெபிக்கும் ஜெபத்திற்குப் பதில் தராவிட்டால், யாரும் அவரிடம் உங்களுக்காக சிபாரிசு செய்யமுடியாது!''

நாம் துன்புறும்போது என்ன செய்யவேண்டுமென்று ஜெபத்தைக்குறித்த படிப்பினையொன்றை அப்போஸ்தலன் யாக்கோபு தனது நடைமுறை நிருபத்தில் தந்துள்ளான்: ''உங்களுள் யாரேனும் துன்புற்றால் (அவன்) ஜெபம்பண்ணக் கடவன்; மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைக்கட்டும்; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவன்மீது எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்'' (யாக் 5:13,14). யாரேனும் துன்புற்றால் ''அவன்'' ஜெபம்பண்ணட்டும். துன்புறுபவன் தான் ஜெபிக்கத் துவங்கவேண்டும். தனது விசுவாசத்தைப் பலமாய் அப்பியாசிக்கமுடியாத அளவு அவனுக்குப் பல

வீனமோ சுகவீனமோ இருக்குமானால், அவன் திருச்சபை யின் தலைவர்களை (மூப்பர்களை) அழைக்கலாம். அதுவும் ''மூப்பன்'' என்றில்லாது ''மூப்பர்கள்'' என்று பன்மையில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். இவர்களைத் தலைவர்கள் அல்லது மேய்ப்பர்கள் அல்லது மூப்பர்கள் என்று பலவாறு அழைக்கலாம். புதிய ஏற்பாட்டின்படி எல்லாம் ஒன்றுதான். நீங்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவராயிருந் தாலும் உங்கள் தலைவர்களை ஜெபத்திற்காய் அழைக்க லாம். எங்களது மேய்ப்பருக்கு அல்லது மூப்பருக்கு சுக மளிக்கும் வரம் இல்லை என்று சொல்லாதீர்கள். வேதம் இங்கு அப்படிப் போதிக்கவில்லை. உங்கள் மூப்பர்கள் உங்களுக் காகக் கர்த்தரின் பெயரால் எண்ணெய் பூசி ஜெபிக்கட்டும். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் உங்களைக் குண மாக்கும். ஆண்டவர் உங்களை வியாதிப்படுக்கையிலிருந்து எழுப்புவார். திருச்சபையின் தலைமைத்துவத்தை ஆண்டவர் கனப்படுத்துகிறார்.

குற்றங்களை ''ஒருவருக்கொருவர்'' அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள் என்றிருக்கிறதே அது என்ன? (வச 16). நாம் சகவுறவுகளைச் சரிசெய்யும் போது தேவனது குணமளிக்கும் வல்லமை நதிபோல் நமக்குள் பாயும். இதைத்தான் புலம்பல் புத்தகத்தில் இப்படி வாசிக் கிறோம்: ''ஆண்டவரது சினத்தின் கோலால் வேதனை அனுபவித்த ஒருவன் நான். அவர் என்னைத் துரத்தியடித்து, ஒளியினுள் அன்று, இருளினுள் நடக்கச் செய்தார்... துணைவேண்டி நான் கூக்குரல் எழுப்பியபோதும், அவர் என் மன்றாட்டைக் கேட்க மறுத்துவிட்டார்... எங்கள் மன்றாட்டு உம்மை வந்தடையாதபடி, மேகத்தால் உம்மை மூடிக்கொண் டீர்'' (புல 3:1,2,8,44). இவ்விதச் சூழலில் நாம் செய்யவேண் டியதென்ன? ''அவரே அதைத் தன்மீது வைத்தாரென்று அவன் தனித்திருந்து அமைதியாய் அமரட்டும்'' (வச 28)— இது சிந்திப்பதற்காய் எடுக்கும் நேரம். அடுத்து, ''நம்பிக் கைக்கு இன்னும் இடமுண்டோ என்று தன் வாயினால் அவன் புழுதியைக் கவ்வட்டும்'' (வச 29)— இது மனந்திரும்புவதற் காய் எடுக்கும் நேரம். ''நாம் நமது வழிகளைச் சோதித்து

ஆராய்ந்து கர்த்தரிடத்தில் திரும்புவோம்'' (வச 40). நாம் செய்யும் தவறு என்னவென்றால், இந்த முக்கியமான படியை நாம் தவிர்க்கப் பார்க்கின்றோம். நான் நோயுறும்போது அல்லது துன்புறும்போது, *நான்* ஜெபிக்கவேண்டும், *நான்* அமர்ந்து உட்காரவேண்டும், *நான்* தற்பரிசோதனை செய்யவேண்டும், *நான்* காரியங்களைச் சரிசெய்யவேண்டும். *பின்னர்* எனது சபையின் மூப்பர்களுக்கு நான் தெரியப் படுத்தலாம். நாமோ இந்தப் படிகளையெல்லாம் விட்டுவிட்டு குறுக்குவழியிலே போக முயற்சிக்கிறோம்.

''எண்ணெய் பூசி ஜெபம்'' என்பதைக் குறித்தும் ஒரு வார்த்தை. திருமறையானது யாக்கோபு 5:13,14இல் ''ஜெபித்த எண்ணெயைப் பூசுங்கள்'' என்று சொல்லாமல், ''எண்ணெய் பூசி ஜெபியுங்கள்'' என்று சொல்வதைக் கவனி யுங்கள். எண்ணெயை அபிஷேகிக்கக்கூடாது; மனிதனை எண்ணெயினால் அபிஷேகிக்கவேண்டும். வேதம் போதிக் கும் செயல்முறைகளை நாம் அலட்சியம்பண்ணினால், கிறிஸ்தவ ஊழியம் வியாபாரமயமாகி, நாளடைவில் ஊழியம் (அட்)ஊழியமாகிவிடும்! கடவுள் இன்றைக்கு எந்தப் பொரு ளையும்—திடப்பொருளோ, திராவகமோ—அபிஷேகிப் பதில்லை, புனிதப்படுத்துவதில்லை. எண்ணெயை ஒரு புட்டியில் வைத்து எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் ஜெபித்துக்கொண்டிருக்கலாம். அந்த எண்ணெய் அப்படியே தானிருக்கும்; அது புனிதமாவதில்லை, அதில் வல்லமை இறங்குவதுமில்லை. கடவுள் இன்று மக்களை மட்டுமே பரிசுத்தப்படுத்துகிறார், அபிஷேகிக்கிறார். நோயுற்றோரின் விசுவாசத்தைத் தூண்டிவிடுவதற்கு எண்ணெய் பூசுவது ஓர் ஏதுவாய்ப் பயன்படலாம். பொருட்களுக்கோ, இடங் களுக்கோ புனிதத்தன்மை வந்துவிட்டது என்று கூறுவது சிலை வணக்கம்தான். இவையெல்லாம் இருண்ட கால (Dark Ages) மூடநம்பிக்கைகளில் மிஞ்சியவை. கிறிஸ்தவர் கள் திருமறைக்குத் திரும்பிவரும்போதுதான் ஜெப வியா பாரம், ஜெப எண்ணெய் வியாபாரம் போன்றவையெல்லாம் ஒழியும்.

“ஆசீர்வதிக்கப்பட்ட துணி” என்றும் கேள்விப்பட்டிருப்பீர்கள். துண்டுத் துணிகளை ஆசீர்வதித்து நோயாளிகள்மேல் போடுங்களென்று ஒருக்காலத்திலும் அப்போஸ்தலர் போதித்ததில்லை. மாறாக, ஒருமுறை மக்கள் பவுலின் மேலிருந்த கைக்குட்டைகளையும் துண்டுகளையும் கொண்டுவந்து நோயுற்றோர்மீது வைத்தார்கள். இது வழக்கமான செயலாயிருக்கவில்லை; அது “விசேஷமான தொரு” சம்பவம் (அப் 19:11,12). இவ்விதப் பழக்கமும் இல்லை; இதைக்குறித்த வேத உபதேசமும் கிடையாது.

வேதத்திற்குப் புறம்பான இன்னொரு பழக்கமும் கிறிஸ்தவ வட்டாரங்களில் காணப்படுகிறது. ஒரு தம்ளரில் தண்ணீர் எடுத்துக்கொண்டு பிரசங்கிமார் அந்தத் தண்ணீருக்காய் ஜெபிக்கிறார்கள்; அதைப் புனித நீர் என்கின்றனர். அதை வியாதிப்படுக்கையைச் சுற்றியும், சுவர்கள்மீதும், ஜன்னல் கதவுகள் மேலும் தெளிக்கவேண்டுமாம்! இது அஞ்ஞான மார்க்கம்! யோவான் 5:1-9இலுள்ள பெதஸ்தா குளத்தைத்தான் இதற்குச் சாதகமாய் மேற்கோள் காட்டுவார்கள். அந்த நாட்களில் இக்குளத்தைக் குறித்து மக்கள் கொண்டிருந்த ஒரு நம்பிக்கையைத்தான் யோவான் எழுதியிருக்கிறானேயன்றி வேறொன்றுமில்லை. அந்தத் தண்ணீரில் ஒரு சக்தியும் இருந்ததில்லை. அப்படியிருந்திருந்தால், ஒவ்வொரு முறை பிணியாளிகள் முண்டியடித்துக்கொண்டு அக்குளத்திற்குள் இறங்கும்போதும், அந்த முப்பத்தெட்டு ஆண்டு வியாதிக்காரன்மீது ஒரு சில சொட்டுகளாவது தெளிக்காமலா இருந்திருக்கும்? இயேசுவும் அவன் குளத்திற்குள் இறங்கவா உதவினார்?

பிரியமானவர்களே, ஒவ்வொரு பிரசங்கியாருக்கும் நிறைய சொந்தப்பிரச்சனைகள் உண்டு. தினந்தோறும், அதுவும் “கண்ணீரோடு,” எப்படி எவரும் உங்களுக்காக ஜெபிக்கமுடியும்? நடைமுறையில் சாத்தியமில்லாத வாக்குகளை நம்பிக்கொண்டிருக்க நீங்கள் அவ்வளவு மதியீனரா? எந்த ஊழியனுக்கு ஆண்டவர் ஒரு நாளைக்கு 24 மணி நேரத்திற்குமேல் கொடுக்கிறார்? 45 ஆண்டுகளுக்குமேல் ஒரு பிரசங்கியாயிருக்கும் நான் உங்களுக்குக் கொடுக்கும் அறிவுரை: “பிரசங்கிமாரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்!”

5

இருதயத்தில் பகை இருக்கக்கூடாது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்த ஒரு ஜெபம் மலைப்பிரசங்கத்தின் நடுவிலுள்ளது (மத் 6:9-13). இதை நாம் கர்த்தருடைய ஜெபம் என்று அழைக்கிறோம். இந்த ஜெபத்தை அடுத்து உடனே ஆண்டவர் என்ன சொன்னாரென்று கவனியுங்கள்: “மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்; மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்” (வச 14,15).

இங்கு நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான காரியம் ஒன்றுண்டு. கர்த்தருடைய ஜெபத்தில் மொத்தம் ஏழு வேண்டல்கள் உண்டு. ஐந்தாவது வேண்டல் மன்னிப்பைப் பற்றியது. ஏழு வேண்டல்களை வரிசைப்படுத்திய ஆண்டவர், ஐந்தாவது வேண்டலைமட்டும் எடுத்து விளக்குவது எதைக் குறிக்கிறது? அது பிறரை மன்னிப்பது எவ்வளவு அத்தியாவசியமானது என்பதைக் காட்டுகிறதல்லவா? ஆனால் இன்று கிறிஸ்தவ வட்டாரங்களில் விசுவாசம் விசுவாசம் என்று ஓங்கிப் பேசப்படுகிறது; மன்னித்தலைக் குறித்தோ பேச்சே இல்லை. ஆனால் தொடர்ந்தேர்ச்சியான வேத போதனை வித்தியாசமாயிருக்கிறதே!

இலைகள் நிறைய இருந்தும் கனிகள் இல்லாத ஓர் அத்திமரத்தை, அதின் வெளிவேடத்திற்காக, ஆண்டவர் சபித்த சம்பவத்தை மாற்கு 11இல் வாசிக்கிறோம். அடுத்த

நாள் காலையில் அவ்வழியே நடந்துவந்த பேதுரு ஆண்டவரைப் பார்த்து, "ரபி, அதோ நீர் சபித்த அத்திமரம் பட்டுப் போயிற்று" என்றான் (வச 21). அதற்கு இயேசு, "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்" என்றார். தொடர்ந்து அவர் கூறியது: "எவனாவது இந்த மலையைப் பார்த்து, 'பெயர்ந்து கடலில் விழு' எனத் தன் உள்ளத்தில் ஐயம் எதுவுமுன்றி நம்பிக்கையுடன் கூறினால், அவன் சொன்னவாறே நடக்கும்" (வச 22,23). இப்படிச் சொல்லி நிறுத்தாமல், மேலும் அவர் சொன்னது: "நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும்போது யார் மீதாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருந்தால், **மன்னித்துவிடுங்கள்**. அப்பொழுது உங்கள் விண்ணகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிப்பார்" (வச 25). விசுவாசத்தின் வல்லமையைக் குறித்துப் பேசிவிட்டு, உடனே ஆண்டவர் மன்னித்தலின் இன்றியமையாமையை அழுத்திக் கூறுகிறார் பாருங்கள். இதைத்தான் நாணயத்தின் இரு பக்கங்கள் என்பது. ஒரு பக்கத்தில் விசுவாசித்தல், மறு பக்கத்தில் மன்னித்தல். இந்த இரு அச்சுக்களும் இல்லாவிட்டால் அந்த நாணயம் செல்லாக்காசாகிவிடுமல்லவா ? நாம் "எதைக்" கேட்டாலும் அதை விசுவாசத்தோடு கேட்க வேண்டும்; நாம் "எப்பொழுது" ஜெபித்தாலும் அது மன்னிப்பின் சிந்தையுடனிருக்கவேண்டும்.

தீர்க்கன் ஏசாயா தனது காலத்து மக்களது காதுகளில் இச்சத்தியத்தை இடித்துரைத்தான். ஏசாயா 59:1,2, "மீட்க இயலாதவாறு ஆண்டவரின் கை குறுகிவிடவில்லை; கேட்க முடியாதவாறு ஆண்டவரின் காது மந்தமாகிவிடவில்லை. உங்கள் தீச்செயல்களே உங்களுக்கும் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ளன; உங்கள் பாவங்களே அவர் செவிசாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துள்ளன." ஏசாயா குறிப்பிடும் "தீச்செயல்கள்" (அக்கிரமங்கள்) யாவை ? வசனங்கள் 3,4இல் அவை விளக்கப்பட்டிருக்கின்றன. "உங்கள் கைகள் இரத்தப் பழியால் கறைபட்டுள்ளன; உங்கள் விரல்கள் தீமையால்

தீட்டுப்பட்டுள்ளன; உங்கள் உதடுகள் பொய்களை உதிர்க்கின்றன; உங்கள் நாக்கு தீயவற்றை முணுமுணுக்கிறது. நீதியான வழக்கைக் கொண்டுவருபவர் எவரும் இல்லை; உண்மையுடன் வழக்காடுபவர் யாருமில்லை." இப்பகுதி சகவுறவுகளைப் பற்றித்தானே பேசுகிறது ? "கைகளில் இரத்தக்கறை" என்பதின் பொருள் இதுதான் (1 யோ 3:15). நமது சகவுறவுகள் சரியாயில்லாவிடில் நமது ஜெபங்கள் கேட்கப்படுவதில்லை. உதடுகளைக் குறித்தும் நாக்கை குறித்தும் ஏசாயா பேசுவதைக் கவனியுங்கள் (ஏசா 59:3,4). அதாவது, மனிதரோடு நாம் பேசுவதும், ஆண்டவரோடு நாம் பேசுவதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. நாம் மனிதரோடு நல்லுறவில் இல்லையென்றால், கடவுளோடு நல்லுறவு வைத்துக்கொள்ளமுடியாது.

மனிதரோடுள்ள நமது உறவுக்கும், தேவனோடுள்ள ஐக்கியத்திற்குமுள்ள தொடர்பை அப்போஸ்தலன் யாக்கோபு அழுத்தந்திருத்தமாக தனது நிருபத்தில் விளக்கியுள்ளான்: யாக்கோபு 3:8-10, "நாவை அடக்க யாராலும் முடிவதில்லை. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது கொடியது. சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது. தந்தையாம் ஆண்டவரைப் போற்றுவது அந்நாவே; கடவுளின் சாயலாக உண்டாக்கப் பட்ட மனிதரைத் தூற்றுவதும் அந்நாவே. போற்றலும் தூற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன. என் சகோதரரே, இவ்வாறு இருத்தலாகாது." நாம் பிறரோடு பேசும்போது பயன்படுத்தும் ஒவ்வொரு வார்த்தையையும் குறித்து மிகுந்த கவனமாயிருக்கவேண்டும். அவதூறாய்ப் பேசுகிறோமா ? மூர்க்கத்தனமாய்ப் பேசுகிறோமா ? குற்றஞ்சாட்டும் தொனியில் பேசுகிறோமா ? திமிரான வார்த்தைகளைப் பிறர்மீது கொட்டுகிறோமா ? இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் சரிசெய்யாமல் இருந்தால் நாம் ஜெபக்கலையில் தேறிவிட முடியாது. எனவேதான் இதே நிருபத்தின் முடிவில் அப்போஸ்தலன் யாக்கோபு இவ்விதம் எழுதுகிறான்: யாக்கோபு 5:16, "நீங்கள் சுகமடையும்படி உங்கள் குற்றங்களை

ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்.'' "ஒருவருக்கொருவர்'' அறிக்கை பண்ணுங்கள். இதுதான் பரஸ்பர ஐக்கியத்திற்கு ஏதுவுண்டாக்கும். இவ்விதமான அறிக்கைகளிருந்தால்தான் நமது ஜெபங்கள் பலனுள்ளவையாக மாறும். அதே வசனத்தின் முடிவு வரியைக் கவனியுங்கள்: "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பயனுள்ளதாயிருக்கிறது.'' ஆம், நமது குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒப்புரவாகி, காரியங்களைச் சரிசெய்தால்தான் நமது ஜெபம் ஜெயமாயிருக்கும். நண்பரே, யார் யாரையெல்லாம் நீங்கள் மன்னித்துவிடவேண்டும், யார் யாரிடமெல்லாம் மன்னிப்பு கோரவேண்டும் என்று யோசித்துப்பார்த்து ஒரு பட்டியலைத் தயாரியுங்கள். காலந்தாழ்த்தாமல் ஒவ்வொன்றாய்ச் சரி செய்யுங்கள். அப்பொழுது உங்கள் மனச்சாட்சி குற்றமற்றதாகும். "நமது இருதயமே நம்மைக் குற்றவாளியாய்த் தீர்க்குமானால், தேவன் நமது இருதயத்திலும் பெரியவராயிருந்து எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். பிரியமானவர்களே, நமது இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடம் தைரியம் கொண்டிருந்து, அவருடைய கட்டளைகளை நாம் கடைப்பிடித்து அவருக்கு உகந்தவற்றைச் செய்கிறபடியால், நாம் அவரிடம் எதைக் கேட்டாலும் அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்'' (1 யோ 3:20-22).

நாம் நமது மனச்சாட்சியைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமானால், அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவரது கட்டளைகளை இரண்டாய்ப் பிரிக்கலாம்: "அவரை விசுவாசிக்கவேண்டும்...ஒருவரையொருவர் நேசிக்கவேண்டும்.'' கடவுளை விசுவாசித்தலும் மனிதரை நேசித்தலும் பின்னிப்பிணைந்தவை. பிரியமானவர்களே, இதில் நாம் போதுமான அக்கறை செலுத்தாவிடில் நமது ஜெபவாழ்வு தேய்ந்துகொண்டேபோகும். யாரோ ஒருவரோடு சண்டையிட்டுக் கசந்துகொண்டோம் என்று வைத்துக்

கொள்வோம். வீட்டிற்கு வந்தவுடன் என்ன ஜெபிக்கிறோம்? "தேவனே, உமது கண்ணின் மணியைப்போல என்னைக் காப்பாற்றும்'' என்கிறோம். நாம் எவ்விதம் கண்மணிபோல் கடவுளுக்கு முக்கியமானவரோ, அதேவிதமாக நாம் மோதிக்கொண்டோமே அந்த நபரும் கடவுளுக்கு முக்கியமானவர் தானே? அவர் ஆண்டவரது அடுத்த கண்ணின் மணியாயிருக்கலாமே! தேவனுடைய பிள்ளைகள் அனைவருமே கிறிஸ்துவின் திருவுடலில் உறுப்புகளாயிருக்கின்றனர். ஏதோ ஓர் உறுப்பில் ஒரு பாதிப்பு ஏற்பட்டால் உடனே அதை வெட்டி எறிந்துவிடுகிறோமா என்ன? நம்மிடம் கடவுள் எவ்வளவு பொறுமையாயிருக்கிறார் என்பதை மறந்து விடுகிறோமோ? அப்படியே நாமும் பிறரிடம் பொறுமை காட்டுவோம். சகலத்தையும் சகிக்க முயற்சிப்போம். இந்தப் போதனையை ஏனோதானோவென்று எடுத்துக்கொள்ளாதீர்கள். இதை அத்தியாவசியமாய் நினைத்துக்கொள்ளுங்கள்.

மீண்டுமாய் மலைப் பிரசங்கத்திற்கு வாருங்கள். மத்தேயு 5:23,24, "நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்தவரும்போது உங்கள் சகோதரர் எவருக்கும் உங்கள் மீது மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், **முதலில்** அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக்கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்.'' "முதலாவது'' என்று ஆண்டவர் சொன்னால் அது முதலாவதுதான். ஆண்டவரது இந்த வார்த்தைகளின் சூழமைவைப் பார்த்தால், "மனத்தாங்கல்'' என்பது புண்படுத்தும் சொற்களால் ஏற்படுவது எனத் தெரிகிறது. வசனம் 22, "தனது சகோதரனிடம் சினங்கொள்ளுகிறவன் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவான். தனது சகோதரனை 'முட்டாளே' என்பவன் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவான். 'அறிவிலியே' என்பவன் எரிநரகத்திற்கு ஆளாவான்.'' "தண்டனை... தீர்ப்பு... நரகம்!'' என்னே ஆபத்து! எவ்வளவு கவனமாயிருக்கவேண்டும், பாருங்கள்!

இன்று எல்லாரும் எழுப்புதலைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கூட்டத்தை நேர்த்தியாய் நடத்துவதின்மூலம் எழுப்புதல் வந்துவிடாது. ஒரு நட்சத்திரப் பிரசங்கியாரை அழைத்துவந்துவிடுவதால் எழுப்புதல் வந்துவிடாது. இசைக்கருவிகளை ஓங்கி வாசிப்பதால் எழுப்புதல் வந்துவிடாது. திருச்சபையிலுள்ள அனைவரும் ஒருவரோடொருவர் மனம்பொருந்தும்போது மட்டுமே எழுப்புதல் வரும். அடுத்தவர் முதலாவது சரி செய்யட்டும் என்று காத்திராதேயுங்கள். "**நீங்களே**" முதலடி எடுத்து வையுங்கள். யார் முதலாவது பணிந்துபோவது என்று விவாதித்துக்கொண்டிராதீர்கள். காணிக்கை செலுத்த வரும் "நீங்கள்," ஜெபிக்க விரும்பும் "நீங்கள்," முதலடி எடுத்துவைத்து ஒப்புரவாகுங்கள். நன்மையும் கிருபையும் உங்களைத் தொடரும்.

6
தன்னலமாய் இருக்கக்கூடாது.

தன்னையே மையமாகக் கொண்ட தலைமுறை இது. எந்தக் காரியமானலும் சரி, எந்தச் சூழலானாலும் சரி, இதினால் "எனக்கு" என்ன கிடைக்கும் என்பதே கேள்வி. மனித வரலாற்றிலேயே என்றுமில்லாத அளவு இன்று தன்னலம் தாண்டவமாடுகிறது. இந்நாட்களைக் "கொடிய காலங்கள்" என்று பவுல் அப்போஸ்தலன் தனது இரண்டாம் கடிதத்தைத் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது முன்னறி விப்பாய்க் குறிப்பிட்டான். 2 தீமோத்தேயு 3:1-4, "இறுதி நாட்களில் கொடிய காலங்கள் வரவிருக்கின்றன என அறிந்துகொள். **தன்னலம் நாடுவோர்**, பண ஆசையுடை யோர், வீம்புடையோர், செருக்குடையோர், பழித்துரைப்போர், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதோர், நன்றியற்றோர், தூய்மை யற்றோர், அன்புணர்வற்றோர், ஒத்துப்போகாதோர், புறங் கூறுவோர், தன்னடக்கமற்றோர், வன்முறையாளர், நன் மையை விரும்பாதோர், துரோகம் செய்வோர், கண்மூடித் தனமாய்ச் செயல்படுவோர், தற்பெருமை கொள்வோர், கடவுளை விரும்புவதைவிடச் சிற்றின்பத்தை விரும்புவோர் ஆகியோர் தோன்றுவர்." இதில் பட்டியலிடப்பட்டுள்ள 18 தீங்குகளில் முதலாவது வருவது "தன்னலம்" என்பதைக் கவனியுங்கள்.

மார்க்கவுலகில், அதுவும் கிறிஸ்தவத்தில், தலைவிரித் தாடும் தன்னல ஆவி நமது ஜெப வாழ்வில்தான் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. நமது ஜெபங்களெல்லாம் பெரும் பாலும் தன்னலமானவையே. "எனது" தேவைகள், "எனது"

வேலை, ''எனது'' குடும்பம்... இவைதான் நமது ஜெபங்களை ஆக்கிரமித்துள்ளன. நாம் அடிக்கடி மேற்கோள்காட்டும் கர்த்தருடைய ஜெபத்தைக் கவனித்துப்பாருங்கள். நமக்கு அது மனப்பாடமாகவே தெரியும். அது பரமண்டலங்களி லிருக்கிற ''**எங்கள்**'' பிதாவே என்று துவங்குகிறது. ''என்'' பிதா அல்ல, ''எங்கள்'' பிதா! அன்றன்றுள்ள ஆகாரத்தை இன்று ''**எங்களுக்குத்**'' தாரும், ''எனக்கு'' அல்ல! ''**எங்கள்**'' கடனாளிகளுக்கு ''**நாங்கள்**'' மன்னிக்கிறதுபோல, ''**எங்கள்**'' கடன்களை ''**எங்களுக்கு**'' மன்னியும். ''**எங்களைச்**'' சோத னைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று ''**எங்களை**'' இரட்சியும். எல்லாமே பன்மையிலிருப்பதைக் கவனியுங்கள். இது ஏதோ யதேட்சையாய்ச் சொல்லப்பட்டது அல்ல. நமது ஜெபங்களில் தன்னலம் துரும்பளவும் காணப்படக்கூடா தென்று வேண்டுமென்றே ஆண்டவர் திரும்பத் திரும்ப பன்மைப் பதங்களைப் பயன்படுத்தினார். தன்னல ஜெபங் களை ஆண்டவர் மதிப்பதில்லை.

பழைய ஏற்பாட்டிலுள்ள ஒரு தீர்க்கதரிசனப் பகுதியில் ஆண்டவர் தமது மக்களை எவ்விதம் கடிந்துகொள்ளுகிறா ரென்று பாருங்கள்: ஏசாயா 1:15,16, ''என்னை நோக்கி உங்கள் கைகளை நீங்கள் உயர்த்தும்போது, பாராமுகத் தினனாய் நான் இருப்பேன்; நீங்கள் தொடர்ந்து மன்றா டினாலும் நான் செவிகொடுப்பதில்லை; உங்கள் கைகள் இரத்தக்கறையால் நிறைந்திருக்கின்றன. உங்களைக் கழுவித் தூய்மைப்படுத்துங்கள்; உங்கள் தீச்செயலை எனது திருமுன்னிருந்து அகற்றுங்கள்.'' ''உங்கள் கைகளில் இரத்தக்கறை'' என்று ஆண்டவர் எதைக் குறிப்பிட்டார்? இதற்கான விளக்கம் அடுத்த வசனத்தில் தொடர்கிறது: ''தீமை செய்தலை விட்டொழியுங்கள்; நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்; நீதியை நாடித் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டோருக்கு உதவிசெய்யுங்கள்; திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள்; விதவைக்காக வழக்காடுங்கள்'' (வச 16,17). வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால்,

நமது ஜெபங்களில் நமது சொந்தக் காரியங்களே மைய இடத்தை எடுத்துக்கொண்டு, பிறரது அங்கலாய்ப்புகளுக்கு அங்கே இடமில்லாது போகுமானால், அவ்வித ஜெபங்களை ஆண்டவர் மதிப்பதேயில்லை. தமது முகத்தையே மறைத்துக் கொள்வார்!

இன்று எங்கும் துதிப்பதிலும் ஆராதிப்பதிலும் ஓர் எழுச்சி காணப்படுகிறது. ஆனால் நமது துதி ஆராதனைகளில் உண்டாகும் பரவசம் நம்மைச் சுற்றியுள்ள மக்களது துன்பங் களைப் பார்க்கமுடியாதவாறு நமது கண்களை மறைத்து விடக்கூடாது. இதைக்குறித்து நமக்கு வரும் நேரடிப் புத்தி மதி எபிரேயர் 13:15,16இல் உண்டு: ''அவருடைய நாமத் தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்.'' ஆம், இடையறாத துதி ஆராதனையை தேவன் விரும்புகிறார். இது நாணயத்தின் ஒரு பக்கம் மட்டுமே. அடுத்த பக்கத்தை அடுத்த வசனத்திலேயே காண்கிறோம்: ''**அன்றியும்** நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்'' (வச 16). ஆராதிப்பதில் மகிழ்ந்திருக் கும்போது பிறரது துன்பங்களை ''மறந்துவிடுவதற்கான'' சாத்தியக்கூறு இங்கு எச்சரிக்கப்படுகிறது.

பிரியமானவர்களே, உங்களுடைய பிரச்னை எதுவாயிருந் தாலும் அதனைக் குறித்த சுயபரிதாபத்திலிருந்து வெளியே வாருங்கள். மற்றவர்களது இன்னல்களும் பிரச்னைகளும் நம்முடையவைகளைவிடக் கொடியவை, மோசமானவை என்ற உண்மையை எப்பொழுதும் மனதிலிருத்திக்கொள் ளுங்கள். யோபுவின் வாழ்க்கையில் இது அழகாய்ச் சித்தரிக்கப்பட்டுள்ளது. தனக்கிருந்த எல்லாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக, அதுவும் வேக வேகமாக, அவன் இழந்தான் (யோபு 1:13-19). ஐயோ, எல்லாம் போய்விட்டதே என்று துக்க சாகரத்திலே அவன் மூழ்குவதற்குப் பதிலாக தனது நண்பர்களுக்காக வேண்டுதல் செய்யத்தொடங்

கினான். அவனுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்கள் வறட்டு வார்த்தைகளால் அவனுக்கு ஆலோசனை சொல்லிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவனாகிய எலிப்பாசைப் பார்த்து ஆண்டவர் கூறியது: "உன்மீதும் உன் இரு நண்பர்கள் மீதும் எனக்குச் சினம் பற்றியெரிகிறது. ஏனெனில், என் ஊழியன் யோபு போன்று நீங்கள் என்னைப்பற்றிச் சரியாகப் பேசவில்லை" (யோபு 42:7). தேவ கோபம் அவர்கள்மீது எப்படிக் கொட்டப்பட்டதெனச் சொல்லப்படவில்லை. ஆனால் அது பயங்கரமாயிருந்திருக்கும். ஆண்டவரது வார்த்தைகள் அப்படித்தானிருந்தன: "என் ஊழியன் யோபு உங்களுக்காக மன்றாடும்போது, நானும் அவன் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வேன்... உங்கள் மடமைக்கு ஏற்றவாறு செய்யாது விடுவேன்" (வச 8). யோபுவின் வேண்டுதல்தான் அவர்களைக் காப்பாற்றிற்று. "யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்" (வச 10). என்னே சத்தியம்!

"ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாக வளரும்!" நமது சொந்தத் தேவைகளிலிருந்து நமது கண்களை எடுத்து சுற்றியிருப்போரின் தேவைகள், இன்னல்களைக் கண்ணோக்கிப் பார்ப்போம். அவற்றை நமது ஜெபங்களுக்குள் புகுத்துவோம். ஒருவேளை ஏற்கனவே நீங்கள் பிறருக்காய் ஜெபித்துக்கொண்டிருப்பீர்கள். அன்னியருக்காகவும் உங்களை விரோதிக்கிறவர்களுக்காகவும் ஜெபிக்கிறீர்களா? இயேசுவின் போதனையைக் கவனியுங்கள்: மத்தேயு 5:44,45, "உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் **வேண்டுங்கள்.** இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தமது கதிரவனை உதித்தெழச்செய்கிறார்; நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழைபெய்யச் செய்கிறார்."

நமது குறுகிய வட்டத்திற்குள்ளேயே நிறுத்திவிடாதபடி வெளியே தேவையிலிருக்கும் மக்களுக்காகவும் ஜெபிக்கும்படி நமது இருதயங்களை விசாலமாக்குவோம். நமது பெரிய தேவனைப்போலவே நமக்கும் பெரிய இருதயம் இருக்கட்டும். நல்லோர் தீயோர், நீதிமான்கள் பாவிகள், யாவரையும் அவர் உள்ளடக்குகிறாரே! இவர்கள் யாவருக்காகவும் நாமும் ஜெபிக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். தீமோத்தேயுவுக்குப் பவுல் கொடுத்த போதனையும் அதுதான்: "**அனைவருக்காகவும்** மன்றாடுங்கள்; இறைவனிடம் வேண்டுங்கள்; பரிந்துபேசுங்கள்; நன்றி செலுத்துங்கள். **முதன்முதலில்** நான் உங்களுக்குத் தரும் அறிவுரை இதுவே" (1 தீமோ 2:1). "எல்லாரையும் ஆசீர்வதியும், ஆண்டவரே" என்ற உப்புசப்பில்லாத ஜெபமல்ல இது. நாம் அவர்களுக்காக "மன்றாட" வேண்டும்; "வேண்டுதல்" செய்யவேண்டும்; "பரிந்துபேச" வேண்டும்; அவர்களது வாழ்க்கையிலும் அவர்கள் மூலமாகவும் ஆண்டவர் என்ன செய்யப்போகிறாரென்று விசுவாசித்து அவர்களுக்காக "நன்றி செலுத்தவும்" வேண்டும்.

எல்லாருக்காவும் ஜெபியுங்கள், எல்லாருக்காகவும் மன்றாடுங்கள், எல்லாருக்காகவும் தேவனைத் துதியுங்கள். உங்கள் ஜெபங்களுக்கு இவ்விதம் புதிய பரிமாணம் தாருங்கள். தன்னலமாயிராதேயுங்கள். எத்தனைபேருக்கு முடியுமோ அத்தனைபேருக்காய் ஜெபியுங்கள். உங்கள் மகனோ மகளோ தேர்வுக்காக ஆயத்தம்பண்ணிக்கொண்டிருக்கும்போது அவனுக்காக, அவளுக்காக ஜெபிப்பதோடு நிறுத்திவிடாதீர்கள். தேர்வு எழுதப்போகிற மற்ற மாணவ மாணவியருக்காக, குறிப்பாக படிப்பிலே பின்தங்கியிருக்கும் பலவீன மாணவ மாணவியருக்காகவும், ஜெபியுங்கள். தங்களது வாழ்க்கைப் பின்னணியில் வறுமையிலும் மற்றும் வசதியற்ற சூழ்நிலைகளிலுமிருந்து வரும் மாணவருக்கு நமது ஜெபம் எவ்வளவாய்த் தேவை! இவ்விதமான விசாலமான ஜெபம் நமது பரம தந்தையின் இதயத்தைக் குளிர்விக்கும்.

இன்னோர் எடுத்துக்காட்டு: திருமண வயதிலே மகனோ மகளோ உங்களுக்கு இருக்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். அவர்களுக்காக மிகுந்த பாரத்தோடும் கரிசனையோடும் ஜெபிப்பது இயல்புதான். அதே சமயத்தில், தங்களது பிள்ளைகளுக்குக் கண்ணியமாக திருமணத்தை நடத்தக்கூடிய அடிப்படை வசதியில்லாத பெற்றோர்களுக் காகவும் ஜெபியுங்கள். இன்னொரு எடுத்துக்காட்டையும் கூறுகிறேன்: ஒரு வாகன விபத்தில் உங்கள் குடும்ப அங்கத் தினர் ஒருவர் மரணமடைகிறார் என்று வைத்துக்கொள் வோம். துக்கம் தாங்கமுடியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டு அழுவது இயல்புதான். அதே வேளையில், அந்த வாகன விபத்தில் இறந்துபோன ஓட்டுனருடைய குடும்பத் திற்காகவும் ஊக்கமாய் ஜெபிக்க மறவாதிருங்கள்.

இப்படியெல்லாம் உங்கள் கற்பனையை விசாலமாக்கி உங்கள் ஜெபப்பட்டியலை நீட்டிக்கொண்டே செல்லுங்கள். முடிந்தால் உட்கார்ந்து இதற்கென்றே ஒரு ஜெபப்பட்டியல் தயாரியுங்கள். உங்கள் ஜெபவாழ்வில் அதிகமாய்க் காணப் படுகின்ற ஒருமைச்சொல் மறைந்து பன்மைச்சொல் மலரட்டும்! "எனக்கு... எங்களுக்கு..." என்பது "பிறருக்கு" என்று மாறட்டும். இயேசுவானவர் தம்மைப் பிரியப்படுத்திக் கொண்டேயிருக்க வாழவில்லை. மற்றவர்களுக்காகவே வாழ்ந்தார். அவர் செய்ததெல்லாம் பிறருக்காகவே. அவரது ஜெபங்களில் தன்னலம் சற்றேனும் இல்லை. எடுத்துக்காட் டாக, அவரது இறுதி ஜெபங்களைக் கவனியுங்கள். தம்மைப் பாதுகாக்க ஒரு தூதர் படையைப் பிதாவிடம் வேண்ட வில்லை. ஆனால் தமது சீடன் சீமோன் பேதுரு அழிந்துபோ காதிருக்கும்படி ஜெபித்தார்: "சீமோனே, சீமோனே, இதோ கோதுமையைப்போல் உன்னைப் புடைக்கச் சாத்தான் அனுமதி கேட்டிருக்கிறான். ஆனால் நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன்" (லூக் 22:31,32). நாற்பது நாள் உபவாசத்திற்குப் பின்னர், இயேசுவுக்குப் பசியுண்டாயிற்று. கல்லுகளை அப்பங்களாக்கும்படிப் பிசாசு

அவரை ஏவினான். "நான் கடவுளின் வாயிலிருந்து வருகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைத்துக்கொண்டிருக் கிறேன்" என்று இயேசு பதிலளித்தார். தமது பசிக்காக அவர் அற்புதம் செய்யவில்லை; ஆனால் திரள்களின் பசி யாற்ற ஐந்தப்பம் இருமீனைப் பன்மடங்காக்கினார். நாமும் அவரையே பின்பற்றி ஜெபவாழ்வில் தன்னலத்தை ஒழித் துக்கட்டுவோம்!

7

உலகச் சிந்தையாய் இருக்கக்கூடாது.

பரலோகம் ஒரு பல்பொருள் அங்காடி என்றும், தங்கள் ஜெபமானது வாங்கவேண்டிய பொருட்களின் பட்டியல் என்றுமே பலரும் நினைத்துக்கொள்கின்றனர். நமது பொருளாதாரத் தேவைகளுக்காகவும் உடல்ரீதியான ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபிப்பதற்காகவே பெரு மளவில் நேரத்தைச் செலவழித்துவிடுகிறோம். இந்தப் பகுதியில் தீர்க்கமான, திட்டமான திருத்தம் தேவை. மறு படியுமாக கர்த்தருடைய ஜெபத்திற்குத் திரும்புவோம் (மத் 6:9-13). இந்த ஜெபத்திலுள்ள ஏழு வேண்டல்கள் இதோ: உமது நாமம் பரிசுத்தப்படுவதாக; உமது இராஜ்யம் வருவ தாக; உமது சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுகிறது போலப் பூமியிலும் செய்யப்படுவதாக; அன்றன்றுள்ள அப்பத்தை இன்று எங்களுக்குத் தாரும்; எங்கள் கடனாளி களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்; எங்களைச் சோதனைக்கு உட்படப் பண்ணாதேயும்; தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். இந்த ஏழு வேண்டல்களையும் கவனித்தால், இவற்றில் ஒன்றே ஒன்றுதான் நமது உடலுக்கடுத்த தேவை யைப் பற்றியது. முதல் மூன்றும் தேவனுடைய காரியங்கள்: அவர் நாமம், அவர் இராஜ்யம், அவர் சித்தம். கடைசி மூன்றும் நமது “ஆன்மீகத்” தேவைகளைபடுத்தவை: பாவமன்னிப்பு, சோதனையில் வெற்றி, தீமையிலிருந்து விடுவிப்பு.

பிரியமானவர்களே, இப்படித்தான் நமது ஜெபங்களை நாம் சமநிலைப்படுத்தவேண்டும். முதலாவது தேவனுக்

கடுத்த காரியங்களுக்காய் ஏங்குங்கள்; அடுத்து உங்கள் ஆன்மீகத் தேவைகளுக்காய் வேண்டுங்கள். இவைகள் தான் நமக்குப் பிரதானமாயிருக்கவேண்டும். மாதிரி ஜெபமாய்க் கொடுக்கப்பட்ட கர்த்தருடைய ஜெபத்தில் ஒன்றே ஒன்றுதான் உடலுக்கடுத்த பொருளாதாரத் தேவையைக் குறித்தது என்பதைத் திரும்பவும் சொல்லுகிறேன். இங்கு தான் இஸ்ரவேல் மக்கள் நிலை தடுமாறிக் கவிழ்ந்தனர். கடவுள் அவர்களை எகிப்திலிருந்து விடுவித்து அழைத்து வந்தார். அவர்களைக் குறித்து உன்னத ஆன்மீக நோக்கு களை அவர் வைத்திருந்தார். அவர்கள் ஆராதிக்கும் ஒரு சந்ததியாய் மாறவேண்டுமென்று தேவன் வாஞ்சித்தார். தீயவை, அசுத்தமானவை யாவற்றையும் அவர்களைக் கொண்டு அழித்துவிட அவர் திட்டமிட்டிருந்தார். தெரிந் தெடுக்கப்பட்ட மக்களாகிய அவர்கள் மூலம் உலகமனைத் தும் ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்பதே அவரது கனவு. இவ்வித உயரிய ஆன்மீக இலக்குகளை அவர்கள் மறந்து விட்டபோதோ, அவர்கள் தரிசனமிழந்து, பொருளாதார மற்றும் உடலுக்கடுத்த நன்மைகளிலேயே நாட்டங்கொள்ளத் தொடங்கினர். அவர்கள் கடவுளுக்கு எதிராக முறுமுறுத் தார்கள்: எண்ணாகமம் 11:5,6, “நாம் எகிப்தில் செலவின்றி உண்ட மீன், வெள்ளரிக்காய், கொம்மட்டிக்காய், கீரை, வெங்காயம், வெள்ளைப்பூண்டு ஆகியவற்றின் நினைவு வருகிறது. ஆனால் இப்பொழுதோ நமது வலிமை குன்றிப் போயிற்று; மன்னாவைத் தவிர வேறெதுவும் நம் கண்களில் படுவதில்லையே.” மக்களது இவ்வித மனப்பான்மை கடவுளுக்குக் கோபமுண்டாக்கிற்று. அவர்களுக்கு வந்த பதில், “ஆண்டவர் உங்களுக்கு இறைச்சி தருவார், நீங்கள் உண்பீர்கள். ஒரு நாள், இரண்டு நாள், ஐந்து நாள், பத்து நாள், இருபது நாள் அல்ல, அது உங்கள் மூக்கில் வெளிவந்து உங்களுக்குத் திகட்டிப்போகும்வரை ஒரு மாதம் முழுதும் உண்பீர்கள். ஏனெனில் உங்களிடையே இருக்கும் ஆண்ட வரை நீங்கள் புறக்கணித்துவிட்டீர்கள்! ஏன் நாங்கள் எகிப்திலிருந்து வந்தோம் என்று கூறி அவர் முன்னே நீங்கள்

அழுதிருக்கிறீர்கள்'' (வச 18-20). ஆம், மக்கள் கேட்டதை ஆண்டவர் கொடுத்துவிட்டார்; அவர்கள் ஆத்துமாக் களிலோ இளைப்பை அனுப்பினார் (சங் 106:15). பிரிய மானவர்களே, அவர்களுக்கு நிகழ்ந்தவை யாவும் நமக்கு எடுத்துக்காட்டுகளாகவும் எச்சரிப்புகளாகவும் எழுதப்பட் டுள்ளன. பழைய ஏற்பாட்டுச் சம்பவங்கள் யாவும் நமக்கு ஆன்மீகப் படிப்பினைகளைத் தருகின்றன (1 கொரி 10:11).

இன்றையக் கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் உடல் ரீதியான, பொருளாதார ரீதியான காரியங்களிலேயே லயித்துப்போயிருக்கிறார்களே என்று அடிக்கடி நொந்து கொள்வேன். அதற்குக் காரணம் என்னவென்றால் இன்று பிரசங்க மேடைகளில் ஓங்கியடித்துப் பேசப்படுகின்ற பிரபலமான செய்தி சுகபோக வாழ்வைப் பற்றியதே. எல்லாமே செழிப்பாயிருக்கும் என்கிற உபதேசமே எங்கும் முழங்கப் படுகிறது. ஆனால் இயேசுவானவர் பிரசங்கித்தது அதுவல்ல. எடுத்துக்காட்டாக, மத்தேயு 6:31-33ஐப் பாருங்கள்: ''எதை உண்போம் ? எதைக் குடிப்போம் ? எதை அணிவோம் ? எனக் கவலைகொள்ளாதீர்கள். ஏனெனில் அஞ்ஞானிகளே இவற்றையெல்லாம் நாடுவர்; உங்களுக்கு இவையாவும் தேவை என உங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்பொழுது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக்கொடுக்கப் படும்.''

இங்கு ''கவலை'' என்று இயேசு குறிப்பிடுவது எதைத் தெரியுமா ? பொருளாதாரத் தேவைகளிலேயே எண்ணத்தை வைத்திருப்பது; எப்பொழுது பார்த்தாலும் அதுவே ஏக்கம்; அதுதான் மனதை அரித்துக்கொண்டேயிருக்கும். ''அஞ் ஞானிகள்'' என்றால் யார் ? இவர்கள்தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இன்னும் விசுவாசிக்காமலிருக்கும் மக்கள். இவர்கள் இன்னும் கடவுளின் பிள்ளைகளாக வில்லை. உயிருள்ள தெய்வத்தினிடம் இன்னும் வராதவர்கள்

இவர்கள். இயேசுவைப் பொறுத்தவரை, அவிசுவாசிகளா கிய இவர்கள்தான் பூவுலகக் காரியங்களிலேயே உழன்று கொண்டிருப்பார்கள். இறைமக்களாயிருப்பவர்களோ பிரதானமாக இறைவனுக்கடுத்த காரியங்களிலேயே கவனமாயிருப்பார்கள். இச்சத்தியத்தை அப்போஸ்தலர்கள் அடிக்கடி தங்கள் நிருபங்களில் சுட்டிக்காட்டி, மக்களை எச்சரித்திருக்கிறார்கள். 1 கொரிந்தியர் 15:19, ''இவ்வுலக வாழ்வுக்காக மட்டும் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை யுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனிதரையும்விட பரித பிக்கப்பட்டதக்கவர்களாயிருப்போம்.'' எளியவனொருவன் விண்ணகத்திற்குச் சென்றுவிடலாம்; ஒரு தொழுநோயாளி யும் இறையரசிற்குள் துழைந்துவிடலாம்; ஆனால் மன்னிக் கப்படாத பாவி எவனும் அங்கு நுழையமுடியாது. முதலாவது இறையரசையும் ஆண்டவருக்குப் பிரியமானவற்றையுமே நாம் தேடும்போது, இரண்டாந்தரமான தேவைகள், சரியான வேளையில், சரியான விதத்தில், அவரால் நமக்குத் தரப்படும்.

அநேக நற்செய்திக் கூட்டங்களுக்கு நீங்கள் சென்றிருப் பீர்கள். கண்ணீர்விட்டுக் கதறியழுகிற முகங்களை நோக்கி வீடியோ காமிராக்கள் திருப்பப்படுவதைப் பார்த்திருப்பீர்கள். இதனை நான் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் பெரும்பாலானோர் எதற்காய் அழுகிறார்கள் தெரியுமா ? பிரசங்கபீடத்திலிருந்து அவர்கள் காதுகளில் விழுகிற வார்த்தைகள் இதோ: ''உங்கள் கணவர் உங்களை நேசிப் பதில்லையோ ? உங்கள் மனைவி உங்களை மதிப்பதில் லையோ ? உங்கள் பிள்ளைகள் உங்களுக்குக் கீழ்ப்படி வதில்லையோ ? ஒருவரும் உங்களைப் புரிந்துகொள்ளு வதில்லையோ ? பயப்படாதிருங்கள். கலங்காதிருங்கள். சோர்ந்துபோகாதிருங்கள். இயேசு உங்களைப் புரிந்து கொள்ளுகிறார். உங்கள் துன்பங்கள் யாவும் அவருக்கு நன்றாய்த் தெரியும்!'' இப்படிச் சொன்னவுடன் கண்ணீர் தாரைதாரையாய் வடிந்துவிடுகிறது. இதில் என்ன விசே ஷம் ? இப்படி வார்த்தைகளைக் கேட்டவுடன் அழுவது இயல்பு

தானே? இப்படிக் கண்ணீரை வரவழைக்க சுவிசேஷப் பிரசங்கமே தேவையில்லை. எவரிடத்திலும் சென்று பரிவுணர்வுடன் அவரைப் பார்த்து, "கவலைப்படாதிருங்கள்; உங்கள் பிரச்னை எனக்கு நன்றாகவே புரிகிறது" என்று சொல்லிப்பாருங்கள், கண்ணீரைக் கொட்டிவிடுவார். இதைக் குறித்துத் திருமறையில் ஒரு திருத்தமுண்டு. எல்லாவற்றிற்கும் திருவார்த்தை உண்டு. எனவேதான் வேதத்தைப் "போதுமானது" என்கிறோம். 2 கொரிந்தியர் 7:10, "கடவுளுக்கு ஏற்புடைய முறையில் தாங்கிக்கொள்ளப்படும் மனவருத்தம் மீட்புத் தரும் மனமாற்றத்தை விளைவிக்கிறது. இதில் வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் உலகப் போக்கிலான மனவருத்தம் சாவை விளைவிக்கும்." இருவிதமான துக்கம் உண்டு: ஒன்று ஆன்மீகக் காரியங்களைக் குறித்த துக்கம்; இதைத்தான் வேதம் "தேவனுக்கேற்ற துக்கம்" என்றழைக்கிறது. அடுத்தது உடலுக்கடுத்த மற்றும் பொருளாதார சம்பந்தமான துக்கம்; இதுதான் "லவுகீக துக்கம்" என்றழைக்கப்படுகிறது. லவுகீக துக்கம் மரணத்தைத்தான் விளைவிக்கும். அதாவது, முடிவில் அதில் ஆசீர்வாதம் எதுவுமிருக்காது. துவக்கத்தில் சற்றுப் பரவசம் காணப்படலாம்; முடிவோ பரிதாபம்தான். தெய்வீக துக்கமோ மனந்திரும்புதலுக்கும் இரட்சிப்புக்கும் நடத்திச்செல்லுகிறது. அதைத்குறித்துப் பின்னர் வருந்தத் தேவையிருக்காது. அழும்படியாய் வேதத்தில் கொடுக்கப்பட்ட அழைப்புகள் யாவும் ஆன்மீக நிலையைப் பற்றியவையே: "கடவுளை அணுகிச்செல்லுங்கள்; அவரும் உங்களை அணுகிவருவார். பாவிகளே, உங்கள் கைகளைத் தூய்மையாக்குங்கள். இருமனத்தோரே, உங்கள் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துங்கள். உங்கள் நிலையை அறிந்து, துயருற்றுப் புலம்பி அழுங்கள்" (யாக் 4:8,9). மதில்மேல் பூனையாக, ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒருகால் என்ற நிலையிலிருக்கும் நமது வாழ்க்கைக்காகப் புலம்பியழவேண்டுமென்று இயேசு அழைக்கிறார்!

ஜெபத்திலே மக்கள் சில பொருத்தனைகள் பண்ணுவததைக் குறித்து அறிந்திருப்பீர்கள். "ஆண்டவரே, நீர் எனக்கு இதைச் செய்வீரானால் நான் உமக்கு அதைச் செய்வேன்." மட்டரகமான பொருத்தனைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்! தரக்குறைவான பொருத்தனைக்கு ஓர் எடுத்துக்காட்டைக் கூறட்டுமா? "ஆண்டவரே, நீர் எனக்கு ஓர் ஆண் குழந்தையைக் கொடுத்தால் நான் இந்தப் பத்திரிகையில் சாட்சி எழுதுவேன்." இப்படிப்பட்ட மக்கள் இறையரசிற்குத் தெண்டம். காகிதமும் மையும் நஷ்டம். திருமறையின் தரம் எங்கே போய்விட்டது? பழைய ஏற்பாட்டில் ஒரு மங்கை. அவளது பெயர் அன்னாள். அவளுக்குக் குழந்தையில்லை. நிந்தையும் பரியாசமும் அவளை வாட்டின. திருச்சந்நிதிக்குமுன் சென்று தனது இருதயத்தைக் கடவுளுக்குமுன் ஊற்றினாள். அவள் செய்த பொருத்தனையைக் கவனியுங்கள்: "படைகளின் ஆண்டவரே, நீர் எனக்கு ஓர் ஆண் குழந்தையைத் தருவீரானால், அவனை அவன் வாழ்நாள் முழுவதும் ஆண்டவராகிய உமக்கு ஒப்புக்கொடுப்பேன்" (1 சாமு 1:11). அவன் பட்டம் பெறட்டும்...வேலைக்கு வரட்டும்... இப்படியெல்லாம் அவள் காத்திருக்கவில்லை. அவன் இன்னும் சிறுபிள்ளையாயிருக்கும்போதே அவனை அழைத்துக்கொண்டு சென்று ஆலயத்தில் ஆச்சாரியராயிருந்த ஏலியிடம் ஒப்படைத்துவிட்டாள். அப்படிச் செய்வது ஒரு தாய்க்கு எவ்வளவு கடினமான காரியமென்று சிந்தித்துப்பாருங்கள். அவளும் அவளது கணவனும் ஆண்டுக்கு ஒருமுறைதான் பிள்ளையைப் பார்க்கச் செல்லுவார்களாம் (1 சாமு 2:19). ஆண்டுக்கொருமுறை ஒரு "சிறிய சட்டையை' அவனுக்காக அவள் தைத்துக்கொண்டு செல்வாளாம். ஊசியும் நூலும் அவள் கையிருந்த வேளைகளிலெல்லாம் அவளது உணர்வுகள் எப்படியிருந்திருக்குமென்று கற்பனை செய்து பாருங்களேன்! இது என்ன, பத்திரிகைக்கு சில வரிகள் எழுதுவதா? கிறிஸ்தவம் பின்வாங்கிப் பின்வாங்கி எங்கேயோ போய்விட்டது என்று நான் அடித்துக்கொள்வது

இதினால்தான். ஏலியிடம் அன்னாள் என்ன சொன்னாள் ? "கர்த்தர் கொடுத்தார், கர்த்தருக்கே கொடுத்துவிடு கிறேன்" (1 சாமு 1:27,28).

பொருத்தனைபண்ணும்போது ஆன்மீகக் கண்ணோட் டம் காட்டிய இன்னொருவர் தாவீதரசன். அவன் அடுத்தடுத்து உபத்திரவங்களையும் போராட்டங்களையும் சந்தித்துக் கொண்டிருந்தான். அவனது பொருத்தனையைப் பாருங்கள்: சங்கீதம் 132:1-5, "ஆண்டவரே, தாவீதையும் அவன்பட்ட இன்னல்கள் அனைத்தையும் நினைவுகூர்ந்தருளும். அவன் ஆண்டவராகிய உமக்கு ஆணையிட்டுக் கூறியதை, யாக் கோபின் வல்லவராகிய உமக்குச் செய்த பொருத்தனையை நினைவுகூர்ந்தருளும். ஆண்டவருக்கு ஓர் இடத்தை, யாக்கோபின் வல்லவருக்கு ஓர் உறைவிடத்தை, நான் அமைக்கும்வரை, என் இல்லமாகிய கூடாரத்தினுள் செல்ல மாட்டேன்; படுப்பதற்காக என் மஞ்சத்தில் ஏறமாட்டேன்; என் கண்களைத் தூங்கவிடமாட்டேன்." அவன் பொருத்தனை பண்ணி அர்ப்பணிப்பதாகக் குறிப்பிட்ட உடல் ரீதியான ஆசீர்வாதங்களையும் வசதிகளையும் பாருங்கள்: "இல்லம்... சொகுசு... படுக்கை... தூக்கம்." இதுதான் ஆன்மீகக் கண்ணோட்டம் (spiritual outlook) என்பது.

பிரியமானவர்களே, அன்னாளைப்போல் அர்ப்பணிப் போம்; தாவீதைப்போல் தியாகம்பண்ணுவோம். இப்படிப் பட்டவர்களையே நமது பொருத்தனைகளுக்கு மாதிரியாக்கு வோம். ஆண்டவரோடு மட்டரகமாகப் பேரம்பேசுவதை நிறுத்துவோம்!

8

அதிகமாய்ப் பேசக்கூடாது.

ஜெபத்தைக் குறித்த முதல் போதனையிலேயே ஆண்ட வராகிய இயேசு வீணான வார்த்தைகளை அலப்புவதைக் கண்டித்தார். மாதிரி ஜெபத்தைத் தமது சீடர்களுக்குக் கற்றுக்கொடுக்குமுன், எப்படி ஜெபிக்கக்**கூடாது** என்றுதான் போதித்தார். மத்தேயு 6:7, "நீங்கள் இறைவனிடம் வேண் டும்போது பிற மக்களைப்போலப் பிதற்றவேண்டாம்; மிகுதி யான சொற்களை அடுக்கிக்கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள்." இதற்கு இணையாக இன்று நடப்பது என்ன தெரியுமா ? ஆண்டவரிடமிருந்து உங்களுக்கு ஓர் ஆசீர்வாதம் வேண்டு மென்று வைத்துக்கொள்வோம். "தாரும் ஆண்டவரே, தாரும் ஆண்டவரே, தாரும் ஆண்டவரே, தா...ரும் ஆண்டவரே !" அப்பாவிடம் பிள்ளை இப்படியா கேட்கும் ? அடுத்த வசனத் திலேயே இயேசுவானவர் தரும் எடுத்துக்காட்டைக் கவனி யுங்கள்: "நீங்கள் அவர்களைப்போல் இருக்கவேண்டாம். ஏனெனில், நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார்" (மத் 6:8). "கடவுள்" அறிந்திருக்கிறார் என்றல்ல, "உங்கள் தந்தை" அறிந்திருக் கிறார் என்றார். இதுதான் வித்தியாசம். இந்த உணர்வுக்குள் மட்டும் நாம் வந்துவிட்டால் நமது ஜெபவாழ்வில் ஒரு புரட்சியையும் மறுமலர்ச்சியையும் நிச்சயம் காண்போம்.

பிரியமானவர்களே, ஜெபம் என்பது ஆண்டவருக்குத் தகவல் கொடுப்பதல்ல; அது அவரோடுள்ள உறவை நெருக்குவது. இதை நான் விளக்கட்டும். உங்களுக்கு ஒரு

பிரச்னை அல்லது தேவை அல்லது கேள்வி அல்லது நெருக்கடியான சூழ்நிலை என்று வைத்துக்கொள்வோம். இதைக் குறித்து நீங்கள் ஜெபிக்கும்போது, எல்லா விளக்கங் களையும் ஆண்டவருக்குக் கொடுக்கவேண்டியதில்லை! ஏனென்றால், உங்களுடைய பிரச்னையைக் குறித்து நீங்கள் அறிந்திருப்பதைவிட ஆண்டவருக்குக் கூடுதலாகவே தெரியும். அனைத்தும் அறிந்தவர்தான் தேவன். ஏதோ கேட் பதும் காண்பதும்தான் நமக்குத் தெரியும். ஆண்டவருக்கோ சொல்லப்படாததும், காணப்படாததுமான அத்தனையும் தெரியும். அவர் துவக்க முதல் முடிவை அறிந்தவராச்சுதே (ஏசா 46:10). எனவே விபரங்களை விலாவாரியாக எடுத்து அடுக்குகின்றதாய் ஜெபம் இல்லாதபடிக்கு, அவரோடு இன்னும் கிட்ட, இன்னும் கிட்டச் சேருகின்ற அனுபவ மாயிருக்கட்டும். அது உங்கள் உள்ளக்குமுறலை அவர்முன் கொட்டிவிடுவதாயிருக்கட்டும் (1 சாமு 1:12-16).

ஜெபத்தில் அலப்புவதை ''மூடரின் பலி'' என்றழைக்கிறது வேதம். பிரசங்கி 5:1-3, ''தேவாலயத்திற்குச் செல்லும்போது விழிப்புடனிரு. மதிகேடரைப்போலப் பலிசெலுத்துவதைவிட, உள்ளே சென்று கேட்டறிவதே மேல்... கடவுள் விண்ணுலகில் இருக்கிறார்; நீயோ மண்ணுலகில் இருக்கிறாய். எனவே மிகச்சில சொற்களே சொல். கவலை மிகுமானால் கனவுகள் வரும்; சொல் மிகுமானால் மூடத்தனம் வெளியாகும்.'' இவ்வேதப்பகுதி ஜெபத்தைப் பற்றியதுதானே?

தனது நாவுக்குக் காவல் வைக்கவேண்டுமென்று தாவீது எதற்காக அப்படி ஜெபித்தான் தெரியுமா? சங்கீதம் 141:2, ''ஆண்டவரே, தூபம்போல் என் மன்றாட்டு உம் திருமுன் ஏற்றுக்கொள்ளப்படுவதாக. மாலைப்பலிபோல் என் கைகள் உம்மை நோக்கி உயர்வனவாக''—இது ஜெபத்தைக் குறித்தது. அடுத்த வசனத்திலேயே அவன் சொல்வது: ''ஆண்டவரே, என் நாவுக்குக் காவல் வைத்தருளும்; என் இதழ்களின் வாயிலில் காவலாளியை வைத்தருளும்'' (வச 3).

''எனது உதடுகளாகிய வாசலையும் மீறி நாக்கு நீண்டு விடாதபடிக் காத்துக்கொள்ளும்'' என்று தாவீது ஜெபித் தான். அவன் ஜெபமாய் ஏறெடுத்ததை அவன் மகன் சால மோன், பிரசங்கி 5:1-3இல், ஒரு போதனையாய்த் தந்து விட்டான். அப்பா ஜெபவீரன் (சங்கீதக்காரன்), மகன் பிரசங்க வேந்தன்!

ஜெபமானது நமக்கும் தேவனுக்கும் இடையே இரு வழிப்பாதையாய் இருக்கவேண்டும். தேவன் பேசுவதைக் கேட்டுக்கொண்டேயிருங்கள்; அவருக்குப் பதில்கொடுக் கும் வகையில் அவருடன் பேசுங்கள். பேசுவதைக் குறைத்துக் கேட்பதைக் கூட்டுங்கள். அப்போஸ்தலன் யாக்கோபு இதை அழகாக விவரித்துள்ளான். யாக்கோபு 1:17-19,21, ''நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் விண் ணிலிருந்துண்டாகி, ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன. அவரிடம் எவ்வகையான மாற்றமும் இல்லை, அவர் மாறிக்கொண்டிருக்கும் நிழல் அல்ல. தமது படைப்புகளுள் நாம் முதற்கனிகளாகும்படி சத்திய வசனத்தினாலே அவர் நம்மை ஈன்றெடுத்தார். ஆகையால், என் பிரிய சகோதரரே, ஒவ்வொருவரும் கேட்பதில் வேகமும் பேசுவதிலும் சினங்கொள்வதிலும் தாமதமும் காட்டவேண்டும்... உங்கள் உள்ளத்தில் ஊன்றப் பட்ட வார்த்தையைப் பணிவோடு ஏற்றுக்கொள்ளுங்கள்.'' இந்தத் தத்துவம் உங்களுக்குப் புரிகிறதா? நமது ஆன்மீகப் பிறப்பிற்கு மூலகாரணர் தேவனே. ''அவர் சித்தங் கொண்டு...'' (வச 18). அவரது வசனமே நம்மை உருவாக்கிய வித்து. எனவே அவரே நிறையப் பேசட்டும். நீங்கள் கேட்கி றதற்கு ஆத்திரமாகவும், பேசுவதற்கோ நிதானமாகவும் இருங்கள். ''வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங் கள்.'' இதன் பொருள் என்னவெனில் நாம் பேசவேண்டு மென்று துடிக்காமல் இருதயத்தை அமைதிப்படுத்தி அவரது வார்த்தைக்காய்க் காத்திருப்பதாகும். இவ்விதப் பயிற்சியின் முடிவான நோக்கம் என்னவெனில், நம்மை நாம் மாற்றிக்

கொள்வதிலேயே ஆர்வங்காட்டவேண்டும். ''உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க...''—இதன் பொருள் அதுதான். ஜெபமென்பது கடவுளுக்கு உரையாற்றுவதல்ல!

மேற்குறிப்பிட்ட சத்தியம் பவுலின் வாழ்க்கையில் மிகநேர்த்தியாய் அனுபவமானது. அவனுக்கு அவனது உடலில் ஒரு முள் இருந்தது. அது அவனை எப்பொழுதும் அரித்துக்கொண்டிருக்கும் பிரச்னையாயிருந்தது. அது அவனைக் ''குட்டிக்கொண்டே'' இருந்ததாம்! அது தன்னை விட்டு நீங்கும்படி அவன் ஜெபத்தில் ஆண்டவரிடம் வேண்டினான். அவன் ஜெபித்தபிறகு கர்த்தருக்கு முன்பாகக் காத்திருக்கும்போது ஆண்டவர் அவனுக்கு ஒரு வார்த்தை கொடுத்தார்: ''என் கிருபை உனக்குப் போதும்... உனது பலவீனத்தில் எனது பலம் உன்னைத் தாங்கும்'' (2 கொரி 12:7-9). பவுல் இந்த வார்த்தையைச் சாந்தமாய் ஏற்றுக்கொண்டானா? ஆம், இந்த அனுபவம் பெற்றுப் பல ஆண்டுகளுக்குப்பின்னரே ஒருவேளை தனது நிருபத்தில் பவுல் இதை எழுதியிருக்கலாம் என்று அவனது அறிக்கையிலிருந்து யூகிக்கலாம். ''எனக்கு அருளப்பட்ட ஒப்புயர்வற்ற வெளிப்பாடுகளால் நான் இறுமாப்பு அடையாதவாறு பெருங்குறை ஒன்று என் உடலில் தைத்த முள் போல் என்னை வருத்திக்கொண்டேயிருக்கிறது.'' வேறு வார்த்தைகளில் சொன்னால், ''நான் இறுமாப்படைய நிறைய வாய்ப்புண்டு; தலைகால் புரியாமல் நான் நடக்குமளவிற்கு எனக்கு தெய்வீக வெளிப்பாடுகள் கிடைத்துவிட்டன. ஆனால் இந்நிலையில் ஆண்டவர் தமது வார்த்தையொன்றை எனக்குள் ஊன்றினார். அதை நான் பணிவோடு ஏற்றுக்கொண்டேன். இன்று நான் என்னையே உயர்த்திக்கொள்வதில்லை. தம்பட்டம் அடித்துக்கொண்டு அலைவதில்லை. எனது திறனையோ திறமையையோ குறித்து நான் அலட்டிக்கொள்வதில்லை. மாறாக, கிறிஸ்துவின் வல்லமையே என்மூலம் வெளிப்படும்படி எனது பலமின்மையிலேயே அகமகிழ்கிறேன்.''

பிரியமானவர்களே, ஜெபம் என்று ஆரம்பித்தவுடன் வளவளவென்று பேசி, ஆமென் என்று முடித்துவிடாதீர்கள். இதைத் தவிர்ப்பதற்காகத்தான், திருமறையை முழங்காலில் நின்று வாசியுங்கள் என்று இளம் விசுவாசிகளுக்கு நான் அறிவுறுத்துகிறேன். முழங்காலில் தரித்திருந்து திருவசனத்தைத் தியானித்த வேளைகளில்தான் எனக்கு உபதேசங்களைக் குறித்த தெளிவு நிறைய கிடைத்தது. வேதத்தைத் திறந்துவைத்துக்கொள்ளுங்கள்; இருதயத்தைத் திறந்துவைத்துக்கொள்ளுங்கள்; வானமும் உங்களுக்காகத் திறக்கப்படும்!

ஜெபத்தில் கர்த்தருக்குமுன் காத்திருக்கையில் உங்களைத் திருவசனத்தால் நிறைத்துக்கொண்டேயிருங்கள்—அதாவது, நிறைய வாசியுங்கள்; போதுமான அளவு தியானியுங்கள். இந்தப் பயிற்சியைத்தான் யோவான் 15:7இல் இயேசு இப்படிச் சொன்னார்: ''நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.'' நீங்கள் திருவசனத்தினால் நிறைந்திருந்தால் திருவசனத்திற்கு மாறான எதையும், திருச்சித்தத்திற்கு முரணான எதையும், ஜெபத்தில் கேட்கமாட்டீர்கள், சரிதானே? ஏனெனில், திருவசனந்தான் திருச்சித்தமாம். அதுதான் உங்களுக்கு வரம்பாகிவிடுகிறது. நீங்கள் திருச்சித்தம் எனும் வட்டத்திற்குள் அடங்கி ஜெபிப்பீர்கள். தேவன் அதில் பிரியப்பட்டு உங்களுக்குப் பதிலளிப்பார். தனது வாழ்வில் அடைந்துவிடவேண்டுமென்று தாவீது ஏங்கித் தவித்த காரியம் இதுதான். சங்கீதம் 27:4இல் அதை வாசிக்கிறோம். இந்த வசனத்தை நம்மில் அநேகர் ஞாயிறு பள்ளியில் மனனம் செய்திருப்போம். ''கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்... என் வாழ்நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.'' எதற்காக? ''கர்த்தரது மகிமையைப் பார்க்கவும், அவரது ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யவும்...''

அதாவது, திருப்பிரசன்னத்தில் அமர்ந்துகொண்டு திரு வார்த்தையை அலசி ஆராய்ந்து படிப்பதற்காக!

ஜெபத்தில் கடவுளுக்குப் பிரசங்கம்பண்ணாதீர்கள். சின்ன சாமுவேல் என்ன ஜெபித்தான்? "கர்த்தாவே, சொல்லும்; அடியேன் கேட்கிறேன்!" (1 சாமு 3: 9). ஆனால் நாம் எப்படி ஜெபிக்கிறோம்? "கர்த்தாவே, கேளும்; அடியேன் சொல்லுகிறேன்" இந்நிலை மாறவேண்டும். அதிகமாய்ப் பேசாதீர்கள். இயேசு சொன்ன பரிசேயன்-ஆயக்காரன் உவமையை மறந்துவிடாதீர்கள். பரிசேயன் தன்னைப்பற்றிய முழு விபரங்களையும் கடவுளுக்குமுன் பட்டியலிட்டுச் சொன்னான்; ஆயக்காரனோ ஒரே வாக்கியத்தில் கடவுளுடைய கிருபையிரக்கத்திற்காய்க் கெஞ்சினான். எல்லா வார்த்தைகளையும் கொட்டிவிட்டவன் வெறுமையாய்த்தான் வீடு திரும்பினான்!

9

இயல்பற்ற விதத்தில் செயல்படக்கூடாது.

பரிசுத்த வேதத்திற்காய் ஆண்டவரைத் துதிப்போம். வேதத்திலேயே வேதத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஓர் அழகிய காரணப்பெயர் உண்டு. அது "சத்திய வசனம்" என்பதாகும் (2 கொரி 6:7). அது நமக்குச் சத்தியத்தைப் போதிப்பது மட்டுமல்லாமல் தவறானவற்றையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது. திருவசனம் நமது கண்களைத் திறக்கும்வரை நாம் செய்யும் தவறுகள் நமக்குத் தெரிவதில்லை.

"எப்படி ஜெபிக்கக்கூடாது" என்ற தலைப்பில் 9ஆவது படிப்பினைக்குள் வந்திருக்கிறோம்.

இயல்பற்ற விதத்தில் நடந்துகொள்ளாதீர்கள். ஜெபத்தில் கண்ணியம், கட்டுப்பாடு தொலைந்துவிடக்கூடாது. இப்பகுதியில் நம்மில் பலருக்கும் திருத்தம் தேவைப்படுகிறது. ஜெபத்தில் அதிகம் சத்தம் போட்டால் அதிக வல்லமை என்று ஒருபோதும் நினைத்துவிடக்கூடாது. சொல்லப்போனால், சரக்கு இல்லையென்றால்தான் சத்தம் அதிகமாயிருக்கும்! கூச்சலும் கூப்பாடும் அதிகரித்தால் வார்த்தைகளில் கருத்தாழம் குறைந்துவிடுகிறது. ஆவியில் ஜெபிப்பதென்றால் கத்தி ஜெபிப்பது என்ற பொய்யை நாம் நம்பிவிடக்கூடாது. நாம் "ஆவியோடு" மட்டுமல்ல, "கருத்தோடும்" (உண்மையோடும்) கர்த்தரைத் தொழுதுகொள்ள அழைக்கப்பட்டிருக்கிறோம்.

அளவுக்கு மீறி சத்தம்போடுவது அஞ்ஞான மார்க்கம் என்று சற்றும் தயக்கமின்றிக் கூறுவேன். தீர்க்கன் எலியாவை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன் (1 இரா 18). கர்மேல் மலையில் நடந்த சம்பவம் நமக்கு நன்கு தெரியும். தேவனுடைய தீர்க்கதரிசியும் பாகாலின் தீர்க்கதரிசிகளும் நேருக்குநேர் எதிர்த்து நிற்கிறார்கள். தீர்க்கன் எலியா தனக்குமுன் நின்றுகொண்டிருந்த பாகாலின் தீர்க்கதரிசிகள்மீது ஒரு சவாலைத் தூக்கியெறிகிறான். "நெருப்பு மூலம் பதிலளிக்கும் கடவுளே உண்மைக் கடவுள்'' என்றான். பாகாலை வணங்கும் மக்கள் கத்தினார்கள், குதித்தார்கள், என்னெல்லாமோ செய்துபார்த்தார்கள். எலியா அவர்களைக் கிண்டல்பண்ணத் துவங்கிவிட்டான். அவன் சொன்னது: "இன்னும் உரத்த குரலில் கத்துங்கள். அவன் ஒரு தெய்வம். ஒருவேளை அவன் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கலாம், அல்லது ஒதுக்குப்புறம் போயிருக்கலாம், அல்லது பயணம் செய்துகொண்டிருக்கலாம், அல்லது தூங்கிக்கொண்டிருக்கலாம், அவன் விழித்தெழ வேண்டியிருக்கும்'' (வச 27). இதைக் கேட்டவுடன், "அவர்கள் இன்னும் உரத்த குரலில் கத்தினர். தங்கள் **வழக்கப்படி** வாளினாலும் வேலினாலும், இரத்தம் கொட்டும்வரை, தங்களையே கீறிக் கிழித்துக் கொண்டார்கள்'' (வச 28). இதைத்தான் அஞ்ஞான மார்க்கப் பழக்கங்கள் என்பது. இதைக்குறித்து இயேசு சொல்லியதை முந்திய அத்தியாயத்தில் நாம் கவனித்தது நினைவிருக்கும். பாகாலின் தீர்க்கதரிசிகள் தங்கள் "வழக்கப்படி'' கத்தினார்கள், கூத்தாடினார்கள் என்று வாசிக்கிறோம். ஆம், இதெல்லாம் அஞ்ஞான மார்க்கப் பழக்கம்தான். குறைகுடம் கூத்தாடும்!

ஜெபிக்கும்போது சில வேளைகளில் நமது உணர்ச்சிகள் அதிகமாய்க் கிளறப்படுவதுண்டு. கெத்சமனே தோட்டத்தில் ஆண்டவராகிய இயேசு எப்படியிருந்தார் என்பது நல்லதோர் எடுத்துக்காட்டு. லூக்கா 22:44, "அவர் மிகவும் வியாகுலப் பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.'' எபிரெய நிருப ஆக்கியோன் இதை எப்படி விளக்குகிறானென்று பாருங்கள்: எபிரேயர் 5:7, "அவர் பூவுடலில் இருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று விடுவிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு இருந்த பயபக்தியினால் கேட்கப்பட்டார்.'' இங்கே இயல்பற்ற, செயற்கையான செயல் எதுவுமில்லை என்பது தெரிகிறதா? நடிப்பின் மூலம் இரத்தத்தை வியர்வையாய்ச் சிந்தமுடியுமென்று நினைக்கிறீர்களா? அனைத்துலகத்தாரின் பாவங்கள் யாவும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மீது சுமத்தப்பட்டன. அவர் நமக்காகப் "பாவமே'' ஆகிவிட்டாராம் (2 கொரி 5:21). வேதனையும் வியாகுலமும் நிறைந்த அவ்வேளையில், இருள் சூழ்ந்த அச்சமயத்தில், இயேசு கதறியழுதார். இரத்தம் கொட்டுவதை நாம் பார்த்திருக்கிறோம்; ஆனால் இரத்தம் வியர்வையாய்க் கொட்டுவதைப் பார்த்ததில்லை. எனவேதான் இயல்பற்ற செயல் எதுவும் இங்கு இல்லை என்கிறேன்.

பிரியமானவர்களே, அமைதியாய் ஜெபித்தால் அது ஆவியும் இல்லாதது, அனலும் இல்லாதது என்று தப்பாய் எடைபோட்டுவிடாதீர்கள். 1 சாமுவேல் 1இல் அருமையான தோர் எடுத்துக்காட்டு உண்டு. மனதில் கசப்போடும், உள்ளத்தில் வியாகுலத்தோடுமிருந்த அன்னாளை இங்கு சந்திக்கிறோம். "அவள் மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினாள்'' (வச 10). தொடர்ந்து வரும் வசனங்களைக் கவனியுங்கள்: "அவள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம்பண்ணுகிறபோது, ஏலி அவள் வாயைக் கவனித்துக்கொண்டிருந்தான். அன்னாள் தனது இருதயத்திலே பேசினாள்; அவளுடைய உதடுகள் மட்டும் அசைந்தன, அவள் சத்தமோ கேட்கப்படவில்லை'' (வச 12,13). ஆம், உங்கள் மனக் கசப்பையும், இருதய வியாகுலத்தையும், கொதிக்கும்

உணர்வுகளையும் ஆண்டவருக்குமுன் "அமைதியாகவே" கொட்டிவிடமுடியும். அன்னாள் தனது இருதயத்தைக் கடவுளுக்குமுன் "ஊற்றிக்கொண்டுதானே" இருந்தாள் (வச 15). "எனது துன்ப துயரங்கள் மிகுதியால் நான் இதுவரை பேசிக்கொண்டிருந்தேன்" என்றாள் அவள் (வச 16). சத்தமே போடாமல் உருக்கமாய் ஜெபிப்பது சாத்தியம் என்று நிரூபிக்கிறாள் அன்னாள். ஒரு ஜெபவீரனாகிய தீர்க்கத்தரிசியை அவள் பெற்றெடுத்தாள். அவன் தனது பணியிலிருந்து அதிகாரப்பூர்வமாக ஓய்வுபெற்ற பின்னரும் ஜெபத்தில் தீவிரம் காட்டிக்கொண்டிருந்தான் (1 சாமு 12:23). ஆம், இப்படித்தான் நாம் ஜெபத்தில் ஆழமும் அர்த்தமும் உள்ளவர்களாயிருக்கவேண்டும். உணர்ச்சிகள் இருக்கலாம், ஆனால் உணர்ச்சிவசப்படக்கூடாது. உணர்ச்சிவசப்பட்டுவிட்டால் ஜெபத்தின் இனிமையும் மாட்சியும் கெட்டுவிடும்.

நாம் ஜெபிக்கத் துவங்கும்போதெல்லாம், கடவுள் எங்கேயோ தூரத்திலிருக்கிறாரென்று எண்ணிவிடக்கூடாது. வெளிநாட்டிலிருக்கும் நண்பர்களோடு சிலர் தொலைபேசியில் பேசுவதைக் கவனித்திருக்கிறேன். அவர்கள் போடுகிற சத்தத்தைப் பார்த்தால் கல்கத்தாவிலிருந்து பேசுவது அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியோவில் கேட்கவேண்டுமென்று நினைப்பார்களோ என்று தோன்றும்! அன்று மோசே இறைமக்களைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகளை நினைவுபடுத்துங்கள்: உபாகமம் 4:7, "நமது தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறது போல, தேவனை இவ்வளவு **சமீபமாய்ப்** பெற்றிருக்கிற வேறெ பெரிய மக்களினம் எது?" பழைய உடன்படிக்கையின் காலத்திலேயே இப்படியிருந்திருக்கிறது. புதிய உடன்படிக்கையின் காலமாகிய இந்நாட்களிலோ தேவன் நமக்குச் "சமீபமாய்" மட்டுமல்ல, நமது "நடுவிலும்" நமக்கு "உள்ளேயும்" இருக்கிறார்! மறக்கப்பட்ட இவ்வுன்னத சத்தியத்தை ஜெபப்பழக்கத்திற்குள் கொண்டுவாருங்கள்.

சபைக் கூடுகைகளிலும் ஐக்கிய ஜெபங்களிலும் சேர்ந்து ஜெபிக்கையில் கடைப்பிடிக்கவேண்டிய சில ஒழுங்கு முறைகளை அப்போஸ்தலன் பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய தனது முதல் கடிதத்தில் வரையறுத்துள்ளான். இவையெல்லாம் எக்காலத்திற்கும் உரியவை. 1 கொரிந்தியர் 14:32, "தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே." "நான் என்ன செய்வது? ஆவியானவர் என்மீது வந்துவிட்டார். என்னால் எதையும் கட்டுப்படுத்த முடியவில்லை" என்று எவரும் சொல்ல முடியாது. வேதம் அப்படிப் போதிக்கவில்லை. நமது ஆவிகளை "நாம்தான்" கட்டுப்படுத்தவேண்டுமென்று திருமறை போதிக்கிறது.

அடுத்தவொரு குறிப்பு: "கடவுள் குழப்பத்தை ஏற்படுத்துகிறவரல்ல, அமைதியை ஏற்படுத்துகிறவராயிருக்கிறார். பரிசுத்தவான்களின் சபைகள் எல்லாவற்றிலும் ஒழுங்கு இதுவே" (1 கொரி 14:33). "எல்லாச்" சபைகளிலும் என்பது பெந்தெகொஸ்தே சபைகள், மற்ற சபைகள்; புராதனச் சபைகள், புதிய சபைகள்; இப்படி யாவற்றையும் உள்ளடக்கும். "எல்லாம் நல்லொழுக்கமாகவும் கிரமமாகவும் செய்யப்படவேண்டும்" என்று 40ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். இதன் பொருளென்ன? ஆண்டவரை உயர்த்துகிற, அவரது மக்களை ஆசீர்வதிக்கிற, எல்லாவற்றையும் செய்ய நமக்கு விடுதலை உண்டு. ஆனால் ஒழுங்கும் கிரமமும் விரயமாகிவிடக்கூடாது. எளியதோர் எடுத்துக்காட்டைத் தருகிறேன். மன்றாட்டு ஜெபத்திற்காக ஓரிடத்தில் இருபது பேர் கூடிவந்திருக்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். ஒரு குறிப்பிற்காக ஒருவர் ஜெபிக்கத் துவங்கியதும், மற்ற யாவரும் மெல்லிய குரலில் அவரோடு ஆமோதித்து ஜெபிக்கலாம். ஆனால் பொதுவாக நடப்பது என்னவெனில், எல்லாரும் தங்கள் சத்தத்தை உயர்த்திக் கூச்சல்போட, பாவம் இந்த நபர் கூப்பாடுபோட வேண்டியதிருக்கிறது! ஒருவர் ஜெபிக்கும்போது மற்றவர்கள் மென்குரலில் அதை ஆமோதித்து அவரோடு இணைந்துகொள்ளவேண்டுமே தவிர அவரது சத்தத்தை அமுக்கிவிடக்கூடாது.

இன்னொரு காரியம்: எந்தப் பிரசங்கியாரையும் ஜெபத்தில் காப்பியடிக்காதீர்கள். ஆண்டவர் எங்களுக்கு ஒரு மகளைக் கொடுத்திருக்கிறார். அவள் இயல்பாக எப்படி என்னோடு பேசுவாளென்று எனக்கு நெடுகவே தெரியும். திடீரென்று ஒருநாள் அவள் அடுத்த வீட்டுக்காரருடைய மகள் பேசுவதுபோல் என்னிடம் பேச ஆரம்பித்தால் எனக்கு அது பிடிக்கவா செய்யும் ? எனது மகள் இன்னொருவருடைய மகளைக் காப்பியடித்து அப்படிப் பேசக்கூடாது. அவளுக் கென்றே ஒரு தனிப்பாணி உண்டு. தந்தையாகிய நான் அதைத்தான் அவளிடம் எதிர்பார்ப்பேன். பிரசங்கிமாரைக் காப்பியடிக்காதீர்கள்; மாறாக, ஒரு பிரசங்கியார் ஜெபிக்கும் மனிதனாயிருப்பாரெனில் அவரது ஜெபச்சிந்தையைப் பிடித்துக்கொள்ளுங்கள். தமது பிள்ளைகள் விதவிதமா யிருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். உல கெங்கும் இருக்கும் கோடா கோடி மக்களில் எல்லாவற்றிலும் ஒரே விதமாயிருக்கும் இரு நபர்கள் கிடையவே கிடையாது என்பது உங்களுக்குத் தெரியுமா ? இருநபர்களின் நிறம்கூட ஒன்றுபோலிராதாம்! விதவிதமாயிருப்பதில்தான் அழகே இருக்கிறது . பறவைகள் பலவிதம் ! அதுதான் இறைவனின் படைப்பு.

நீங்கள் நீங்களாகவே இருங்கள். இன்னொருவரின் நகலாகிவிடாதீர்கள். இயல்பாயிருங்கள். உங்களுக்கே உரிய பாணியை விட்டுவிடாதிருங்கள், விற்றுவிடாதி ருங்கள். யாரோ ஒருவரைக் காப்பியடித்து உங்கள் பாணியை நீங்கள் மாற்றிவிட்டால், காலப்போக்கில் உங்க ளுக்குத் தேவன் வைத்திருக்கும் கிருபாவரங்களையும் செயலற்றதாக்கிவிடுவீர்கள். சாதாரணமாய் ஜெபிப்பதுதான் அசாதாரணம்.

ஜெபத்தில் நாம் பயபக்தியைக் கடைபிடிப்போமானால் இயல்பற்ற விதத்தில் செயல்படவேமாட்டோம். எனவேதான் தொன்றுதொட்ட பழக்கமாகிய முழங்காலில் நின்று ஜெபிப் பதை விட்டுவிடாதிருங்கள் என்று கிறிஸ்தவர்களுக்கு

அறிவுறுத்துகிறேன். பல சபைகளில் முழங்கால் ஜெபம் மறக்கப்பட்டுக்கொண்டே வருவதைக் கவனித்திருக்கிறீர் களா ? முழங்காலில் நின்று ஜெபிப்பது கிழக்கத்திய கலாச்சாரமுமல்ல, மேற்கத்திய கலாச்சாரமுமல்ல; அது ஒரு பொதுக் கலாச்சாரம்; அது வேதாகமக் கலாச்சாரம். அரச னைத் தவிர வேறொருவரையும் வணங்கக்கூடாது என்கிற மசோதாவிற்குக் கையெழுத்து முத்திரை வைக்கப்பட்ட தென்று அறிந்தபின்பும், பக்தன் தானியேல் எப்பொழுதும் தான் செய்துவந்தபடியே தினம் மூன்று வேளை **"முழங் கால்படியிட்டு"** ஜெபித்தான் (தானி 6:10). புதிய ஏற்பாட்டில் பவுலின் அறிக்கையைப் பாருங்கள்: "நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவை நோக்கி **முழங்கால்படி யிட்டு...** வேண்டிக்கொள்ளுகிறேன்" (எபே 3:14).

இவ்வித ஒழுங்குமுறைகளையெல்லாம் நீங்கள் வாசித் துக்கொண்டிருக்கும்போது, "அப்படியானால் ஜெபத்தில் சத்தத்தை உயர்த்தவே கூடாதா" என்ற கேள்வி எழலாம். அப்படிச் சொல்லவில்லை. வேதம் சொல்லுவது: "மவுன மாயிருக்க ஒரு நேரமுண்டு, பேச ஒரு நேரமுண்டு" (பிர 3:7ஆ). "நீங்கள் **அமர்ந்திருந்து** நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்" என்று சங்கீதம் 46:10இல் வாசிக் கிறோம். அடுத்த சங்கீதத்திலேயே, "தேவனுக்கு முன்பாகக் கெம்பீர சத்தமாய் **ஆர்ப்பரியுங்கள்**" என்றிருக்கிறது (சங் 47:1).

இந்த அறிவுரைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது ஒன்று தெளிவாகிறது. அதாவது, ஜெபத்தில் இயல்பற்று, கண்ணியமற்று, கட்டுப்பாடின்றி காணப்படக்கூடாது.

10

ஜெபிப்பதைக் குறித்துப் பெருமையடையக்கூடாது.

ஜெபத்தைக் குறித்து இயேசு கிறிஸ்து கொடுத்த முதல் போதனையே இதுதான். மத்தேயு 6:5,6, "நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப்போல் இருக்கவேண்டாம்; மனிதர் பார்க்கவேண்டுமென்று அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்." E.M. பவுண்ட்ஸ் என்ற ஜெப வீரனின் ஓர் அழுத்தமான கூற்று: "ஜெபத்தின் இரகசியமே இரகசியமாய் ஜெபிப்பதே!" (நீங்கள் ஜெபக்கலையில் வளர்ந்துகொண்டே போக விரும்பினால், The Complete Works of E.M. Bounds on Prayer என்ற ஆங்கில நூலை வாங்கி வாசியுங்கள். அவர் ஒரு வக்கீலாக இருந்து சபை மேய்ப்பராய் மாறியவர், 1835-1913).

யாரோ ஒருவருடைய பிரச்னைக்காக நீங்கள் ஜெபித்து வருகிறீர்களென்று வைத்துக்கொள்வோம். அந்த நபர் உங்களிடம் வந்து பிரச்னை தீர்ந்துவிட்டது என்று சொல்லும்போது, "உங்களுக்காக எவ்வளவு ஜெபம்பண்ணினேன் தெரியுமா ?" என்று சொல்லுவதற்கு உங்களுக்குச் சோதனை வருகிறதல்லவா ? பள்ளி மாணவன் ஒருவன் தனக்காக ஜெபிக்கும் ஓர் ஆன்ட்டியிடம் வந்து, "ஆன்ட்டி, இன்று வரலாற்றுப்பாடப் பரீட்சையில் மிகவும் நன்றாய் எழுதினேன்" என்கிறான். உடனே அந்த அம்மையார், "மகனே, உனக்காக நான் எப்படியெல்லாம் ஜெபித்தேன் தெரியுமா ?" என்று பதில் கூறுகிறார்கள். அடுத்த நாள் புவியியல் பரீட்சை. பையன் சரியாக எழுதவில்லை. அதை ஆன்ட்டியிடம் சொல்லு

கிறான். அம்மையார் இப்பொழுது என்ன சொல்லுவார்களோ ? ஒரு ஜெபத்திற்குப் பதில் கிடைத்துவிட்டால் அதற்கான பாராட்டு ஜெபித்த நபருக்கு அல்ல, ஜெபத்திற்குப் பதில் கொடுத்த ஆண்டவருக்குத்தான். அப்படியானால், பேதுருவுக்காய் ஜெபித்த இயேசு, தாம் அவனுக்காய் ஜெபித்திருப்பதை ஏன் அவனிடம் சொன்னாரென்று நீங்கள் கேட்கலாம். ஆம், பேதுருவுக்காய் இயேசு ஜெபித்திருந்தார். அதைப் பேதுரு சோதனையைச் சந்திப்பதற்கு "முன்னதாகவே" அவனிடம் சொல்லிவிட்டாரென்பதைக் கவனிக்க. அவன் அமிழ்ந்து தொலைந்துபோகக்கூடாதென்று அவனுக்குத் தெம்பூட்டும்படியாகவே இயேசு அதைச் சொன்னார் (லூக் 22:31,32). நமது ஜெபங்களுக்குப் பாராட்டுகளைப் பெறவேண்டுமென்று இந்தச் சம்பவத்தை மேற்கோள் காட்டுவது தவறு. "சோர்ந்துபோய்விடாதே, நீ எழும்பி வந்துவிடுவாய்; நான் உனக்காய் ஜெபித்திருக்கிறேன்"— இதுதான் இயேசுவின் வார்த்தைகளின் பொருள். "நான் உங்களுக்காக ஜெபித்தேன், ஜெபிக்கிறேன்" என்பதெல்லாம் விளம்பரமாகிவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

ஊழியக்காரருக்கு ஓர் அறிவுரை: உங்களது ஜெபங்களின் மூலம் அநேகருக்கு ஆச்சரியமான பதில்கள் கிடைத்திருக்கலாம். இவற்றையெல்லாம் வரிசைப்படுத்தி உங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கும்போது நீங்கள் உங்களைத் தானே கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்வி: "இந்த சாட்சிகளை வாசிப்பவர்கள் *'ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா'* எனக் குதூகலத்துடன் ஆண்டவரைத் தொழுதுகொள்வார்களா ? அல்லது, நான் எவ்வளவு வல்லமையாய் ஜெபிக்கிறேன் என்று என் பக்கம் கவரப்படுவார்களா ?"

ஜெபத்துடன் உபவாசமும் வருகிறது. உபவாசம் என்பது ஜெபத்தை உள்ளடக்கியது. உபவாசத்தையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு இரகசியமாகவே கடைப்பிடிக்க வேண்டுமென்பதே இயேசுவின் போதனை. "மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப்போல

முகவாட்டமாய் இருக்கவேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக்கொள்ளுகிறார்கள்... நீங்களோ நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது; மாறாக, மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்குமட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்'' (மத் 6:16-18). ஆனால் துர்ப்பாக்கியமான காரியம் என்னவென்றால், கிறிஸ்தவத்தில் அதிகம் விளம்பரம்பெறுவது உபவாச ஜெபம்தான்! நாம் பிரமாதமாக எதையும் சாதிக்காததில் ஆச்சரியமொன்றுமில்லையே! ''நான் 40 நாட்கள் உபவாசிக்கப்போகிறேன்... 20 நாட்கள் முடிந்துவிட்டன, 25 நாட்கள் முடிந்துவிட்டன, 27 நாட்கள் முடிந்துவிட்டன...'' போன்ற அறிவிப்பெல்லாம் தேவையா? பிரியமானவர்களே, நாம் ஆன்மீகப் பக்திப் பயிற்சிகளைக் குறித்த வேதப் போதனைகளிலிருந்து ஆயிரமாயிரம் மைல்கள் விலகிச் சென்றுவிட்டோம். ஜெபியுங்கள்... ஜெபியுங்கள்... ஜெபித்துக்கொண்டேயிருங்கள்; ஆனால் உங்கள் ஜெபத்தின்மீது சார்ந்துவிடாதீர்கள். தேவனையே சார்ந்திருங்கள்.

நமது ஜெபங்களைக் குறித்து ஒருபோதும் நாம் தம்பட்டம் அடிக்கக்கூடாது என்பதற்குத் திருமறையிலிருந்து சில காரணங்களை உங்கள்முன்வைக்க விரும்புகிறேன்—

r நமது ஜெபங்களுக்குப் பதில்கொடுக்கும் வகையில் தேவன் நமக்குக் கொடுப்பவைகளைவிட தமது சொந்த விருப்பத்தின்படியும் சித்தத்தின்படியும் அவர் தாமாகவே நமக்குக் கொடுத்துவிடுபவைதான் அதிகம். நாம் கடவுளிடம் பெற்றுக்கொண்டவற்றில் பெரும்பாலானவை ஜெபத்தில் ஒரு வார்த்தைகூட உச்சரிப்பதற்குமுன் கிடைத்தவையே. யாக்கோபு 1:17,18ஐக் கவனியுங்கள்: ''நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது... **அவர் சித்தங்கொண்டு...** நம்மைச் சத்திய வசனத்தினாலே பிறப்பித்தார்.'' ஆம், நமது மறுபிறப்பே அவர் எடுத்துவைத்த முதலடியினாலேயே! எனவேதான், ''நீங்களல்ல, நானே உங்களைத் தெரிந்துகொண்டேன்'' என்றார் இயேசு (யோ 15:16). இதுதான் சரியான வேதாந்தம். இக்காலத்துக் கருத்துக்களும் தத்துவங்களுமோ மனிதனையே மையமாய்க் கொண்டிருக்கின்றன. திருமறை போதிக்கும் இறையியலிலேயே நான் நின்றுகொள்ள விரும்புகிறேன். அது என்னவென்றால், ''சகலமும் **அவராலும், அவர் மூலமாயும், அவருக்காகவும்** இருக்கிறது; அவருக்கே என்றென்றும் மகிமையுண்டாவதாக. ஆமென்'' (ரோ 11:36).

r நாம் நமது ஜெபங்களைக் குறித்துப் பெருமை பாராட்டக்கூடாதென்பதற்கு இன்னொரு காரணம், எல்லா அடையாளங்களும், அற்புதங்களும், வரங்களும் ஆவியானவர் மூலமாக ''தேவனுடைய சித்தத்தின்படியே'' நமக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன (எபி 2:4).

r நமக்கு ஜெபிக்கக் கட்டளையிட்டதும் கற்றுக்கொடுத்ததும் ஆண்டவரே. ஆனால் அவர் ''நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே செயலாற்றுகிற வல்லமையின்படியே'' நமக்குச் செய்கிறார். எல்லாப் புகழும் இறைவனுக்கே (எபே 3: 20,21). நாம் ''நினைப்பதற்கும்'' அதிகமாகக் கடவுள் ஆசீர்வதிக்கிறார் என்றிருக்கும்போது நமது ஜெபங்களைக் குறித்துப் பெருமைபாராட்ட இடமெங்கே? இப்படியாக, முடிவில், ''ஜெபித்த எங்களுக்கல்ல, கர்த்தாவே, எங்களுக்கல்ல; ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா, துதி கனம் மகிமை உமக்கே'' என்று அவர்முன் நெடுஞ்சாடையாய் விழுந்துவிட வேண்டும்.

முடிவுரை

“எப்படி ஜெபிக்கக்கூடாது” என்ற தலைப்பில் நாம் படித்த 10 பாடங்களும் ஒரு சித்திரம்போல் கர்த்தருடைய ஜெபத்தில் வரையப்பட்டிருப்பதைப் பாருங்கள் —

1. கடவுளைக் கட்டாயப்படுத்தக்கூடாது.
   “உமது சித்தம் செய்யப்படுவதாக.”

2. பிசாசைக் குற்றஞ்சாட்டக்கூடாது.
   “தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.”

3. பிதாவானவரை மறந்துவிடக்கூடாது.
   “பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே...”

4. மத்தியஸ்தர்களைத் தேடக்கூடாது.
   கடவுள் நமது *“தந்தை,”* நாம் அவரது பிள்ளைகளாகத் தயக்கமின்றி நேரடியாய் அவரிடம் செல்லலாம். அவர் வாசம்பண்ணும் *“விண்ணகம்”* நமக்காய்த் திறந்திருக்கிறது.

5. இருதயத்தில் பகை இருக்கக்கூடாது.
   “நாங்கள் பிறரை மன்னிப்பதுபோல் எங்களை மன்னியும்.”

6. தன்னலமாய் இருக்கக்கூடாது.
   “எங்களுக்கு” வேண்டிய ஆகாரம், “எனக்கு” வேண்டிய ஆகாரம் அல்ல; *“எங்கள்”* குற்றங்களை *“எங்களுக்கு”* மன்னியும், “எனக்கு” மன்னியும் என்றல்ல. *“எங்களை”* இரட்சித்துக்கொள்ளும், “என்னை” இரட்சித்துக்கொள்ளும் என்றல்ல.

7. உலகச்சிந்தையாய் இருக்கக்கூடாது.
   இந்த ஜெபத்திலுள்ள ஏழு வேண்டல்களில் ஒன்றே ஒன்றுதான் உடலுக்கடுத்தது: *“அன்றன்றுள்ள ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.”*

8. அதிகமாய்ப் பேசக்கூடாது.
   கர்த்தருடைய ஜெபம் மிகச் சுருக்கமானதொரு ஜெபம்; ஆனால் அதிலிருக்கும் இனிமைக்கும் வலிமைக்கும் நிகரில்லை.

9. இயல்பற்ற விதத்தில் செயல்படக்கூடாது.
   “நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது, பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே...”
   ஒரு பிள்ளை தனது தந்தையிடம் பேசுவதுபோல் இயல்பாய் ஜெபியுங்கள்.

10. ஜெபிப்பதைக் குறித்துப் பெருமையடையக்கூடாது.
   *“இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் **உம்முடையவைகளே.**”*

‘‘பைபிள் புதையல்கள்’’

by **R. ஸ்டான்லி**

ஆன்மீக வாழ்வின் துவக்கமுதல்
இவ்வுலக வாழ்வின் முடிவுவரை
200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

■

832 பக்கங்கள்;
உறையுடன் தடித்த அட்டை; ரூ. 500/-
அனுப்பச் செலவு ரூ. 50/-
ஆங்கிலத்திலும் உண்டு.

■

இப்புத்தகத்திலுள்ள 200 பாடங்களும்
ஒலித்தட்டுகளாகவும், ஒளித்தட்டுகளாகவும் உண்டு.
ஆங்கிலத்திலிருந்து தமிழ்.

■

40 ஒளித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 2 மணி 30 நிமிடம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 1500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-

■

2 MP3 ஒலித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 50 மணி நேரம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 25/-

■

100 மணி நேரத் திடமான வேத போதனை

■

தனித்தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.
புத்தகத்தை வைத்துக்கொண்டு
இந்த ஒலி-ஒளித்தட்டுகளைப் பயன்படுத்துவது
3-ஆண்டு வேதக் கலாசாலைப் படிப்பிற்குச் சமம்!

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>

**கிறிஸ்தவ வாழ்வில்
நிறைவாய் வளர உணவளிக்கும்
ஒரு தினசரித் தியான நூல்...**



*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்
எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

**அனைத்துச் சபையினரும்...
அனைத்து வயதினரும்...
அனைத்துத் துறையினரும்...
விரும்பி வாசிக்கும்
ஒரு புதிய படைப்பு!**

432 பக்கங்கள்
விலை ரூ. 100/– அனுப்பச் செலவு ரூ. 25/–

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி,
மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.

கிடைக்குமிடம்:
R. STANLEY
StanleyOnBible
13 Church Colony
Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600
<stanleyonbible@hotmail.com>

ஆசிரியரது பிற நூல்கள்—

r *அறிவூட்டும் அகவுணர்வுகள்*
r *ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி ?*
r *ஆனந்த அறுவடை*
r *இரட்சிக்கப்படுவது எப்படி ?*
r *உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்*
r *ஊழியரும் மக்களும்*
r *எதிர்நீச்சல் வாலிபர்*
r *ஐந்தப்பம் இருமீன்*
r *கண் திறக்கும் கட்டுரைகள்*
r *காட்டுத் தேன்*
r *கீழ்ப்படிதலே மேல்படி !*
r *சமநிலைக் கிறிஸ்தவன்*
r *சிறு நரிகள்*
r *திறந்த வானம்*
r *திரும்பிய மனிதன்*
r *தெளிவான பதில்கள் (தொகுப்பு ஒன்று)*
r *தெளிவான பதில்கள் (தொகுப்பு இரண்டு)*
r *நாளொரு மேனி (தின தியானம்)*
r *நெஞ்சில் நெருப்பு*
r *பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!*
r *பொற்பழங்கள்*
r *மாணவ மணிகளுக்கு...*
r *வல்லமை தேவனுடையது!*
r *விசுவாச வாழ்வு*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச் செய்திகள் அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும் கிடைக்குமிடம்—

Blessing Literature Centre
21/11 West Coovam River Road,
Chintadripet, Chennai 600002, India
Tel: 00 91 44 28450411
<blc@bym-india.org>

StanleyOnBible.com

A WEBSITE FOR BIBLE LOVERS

CONTENTS

p ***My Letters***
Stanley talks heart to heart
with the Visitors of this Website.

p ***General Messages***
Enlightening Articles for Christian Growth

p ***Sermon Outlines***
Outlines on miscellaneous subjects for
Personal Meditation and Pulpit Preaching

p ***Bible Studies***
Studies on specific themes
and select books of the Bible

p ***Doctrinal Essays***
Corrective Teaching to uphold
Sound Doctrines of the Bible

p ***Youth Matters***
Practical Guidelines to Young Men
and Young Women for Successful Living

p ***Leaders Column***
Biblical Insights and Practical Lessons
on Christian Leadership

p ***Missionary Challenge***
Calling Christians to obey
the Great Commission of Christ

p ***My Answers***
Answers to Questions
frequently asked but rarely answered

p ***Quotable Quotes***
Stanley's analytical Statements
about Christian Life and Ministry

Register your e-mail id in this website
to receive updates instantly.